Registered as a Newspaper. பக்கங்கள்: பத்து விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 19 ஹிஜ்ரி 1427 ஜ ஆகிர் 05 (04.07.2006) செவ்வாய்க்கிழமை இதழ் 276

புலிகள் மீது தடை விதித்தமை ஐரோப்பா செய்த பெரும் தவறு

ஐ.ஆர்.ஏயின் தலைவர் மக்கன்னஸ் தெரிவிப்பு



கிளிநொச்சி

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருப்பது பாரிய தவறு என - வட அயர்லாந்து விடுதலை இயக்கமான ஐ.ஆர்.ஏயின் மூத்த தலைவரான மாட்டின் மக்கன்னஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வட அயர்லாந்து விடுதலை அமைப்பான ஐ.ஆர்.ஏயின் முன்னாள் தலைவரும், அதன் அரசியல் பிரிவான சின் பெய்ன் பிரதிநிதியுமான (10 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் குண்டுவெடிப்பு

7 பேர் பலி; 12 பேர் காயம்!

திருகோணமலை

திருகோணமலை-அனுராதபுரம் சந்தியில் நேற்றுப்பகல் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் ஒன்றில் படைத்தரப்பினர் 6 பேர் உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டதுடன், மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

திருகோணமலை நகரின் நுழைவாயிலான அனுராதபுரம் சந்தியில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியருகே கைவிடப்

திக்கத்தில் கிளைமோர் படைச் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்

வடமராட்சியில் நேற்று படையினர்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வதிரி - திக்கம் வீதியிலுள்ள மானாண்டி என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 2.05 மணியளவில் ரோந்து சென்ற படையினர்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவ முகாமுக்கு சற்றுத் குண்டே வெடிக்க வைக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொருவரும் படுகாயமடைந்தார்.

இந்தச்சம்பவத்தையடுத்து படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் காயமுற்ற இராணுவச் சிப்

திருகோணமலை

திருகோணமலை-அனுராதபுரம் சந்தியில் நேற்றுப்பகல் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் ஒன்றில் படைத்தரப்பினர் 6 பேர் உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டதுடன், மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

திருகோணமலை நகரின் நுழைவாயிலான அனுராதபுரம் சந்தியில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியருகே கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஓட்டோவினுள் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது.

பஸ் ஒன்றை மறித்து (10 ஆம் பக்கம் பார்க்க)

ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வதிரி - திக்கம் வீதியிலுள்ள மானாண்டி என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 2.05 மணியளவில் ரோந்து சென்ற படையினர்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவ முகாமுக்கு சற்றுத் தொலைவில் பனைமரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர்

சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொருவரும் படுகாயமடைந்தார்.

இந்தச்சம்பவத்தையடுத்து படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் காயமுற்ற இராணுவச் சிப்பாயை உடனடியாக பலாலியில் இருந்து வந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸாரின் சூட்டில் பொதுமகன் ஒருவர் பலி

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன் - கல்வி அதிகாரியான பெண்ணொருவர் படுகாயம் அடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

களுவாஞ்சிக்குடி ரெலிக்கொம் மற்றும் வலயக்கல்வி அலுவலகத்துக்கு அருகே காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதன்போது பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன் வலயக் கல்விப்பணிமனையில் பணியாற்றும் திருமதி எஸ்.பாஸ்கரன் (வயது-40) என்ற பெண் படுகாயமடைந்தார்.

உயிரிழந்த பொதுமகனின் சடலத்துக் கருகே ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்று கிடந்ததாகவும் - (10 ஆம் பக்கம் பார்க்க)

அதிகாரப் பகிர்வுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது

சியாம் சரண் தெரிவிப்பு

கொழும்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியாவின் அரசியலமைப்பு முறையை பகிர்ந்துகொள்ள இந்திய அரசு தயாராக உள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் தெரிவித்தார்.

இலங்கைக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

கிரனேட் வீச்சில் மூவர் காயம்!

அம்பாறை

அம்பாறை மாவட்டம் - சம்மாந்துறையில் நேற்றிரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலின் போது மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சம்மாந்துறையில் நேற்றிரவு 7.45 மணியளவில் ஹோட்டல் ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த பொலிஸாரை இலக்கு வைத்தே கிரனேட் (10 ஆம் பக்கம் பார்க்க)

தாண்டிக்குளத்தில் மோதல் இளைஞரின் சடலம் மீட்பு!

வவுனியா

வவுனியாவில் தாண்டிக்குளம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

தாண்டிக்குளத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இராணுவ நிலைமீது சிறிய ஆயுதங்கள்மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - சுமார் 10 நிமிடங்கள் இந்தத் தாக்குதல் நீடித்ததாகவும் படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் - படையினரால் முன்னர் கைதாகி காணாமல் (10 ஆம் பக்கம் பார்க்க)

அதிரடிப் படையினர் மீது கிளைமோர் தாக்குதல்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு விசேடஅதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பு - குருக்கள்மடம் வீதியில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் ரோந்து சென்றபோதே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

அண்ணாந்து பார்க்கும் ஈபிள் கோபுரம்

1998 இல் உலகக்கிண்ணம் வென்ற பிரான்ஸ் 2002 இல் முதல் சுற்றில் வெளியேறிய காலத்திலிருந்து இன்றுவரை எதிர்கொள்ளாத ஏவுகணைகள் இல்லை. ஆனால், அவர்கள் பதுங்குகுழிகள் தேடி ஓடவில்லை. குறிப்பாக உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான அணித்தெரிவின் போது பிரான்ஸ் பயிற்றுனர் றோமன்ட் டெமனெச் மிகுந்த கண்டனத்துக்கு உள்ளானார்.

அதாவது வயது முதிர்ந்த அணியொன்றைத் தெரிவு செய்துள்ளார் இவர். இவற்றால் சாதிக்கக்கூடியது எதுவும் இல்லை என்ற கண்டனம் கடுமையாக எழுந்தது. ஆனால் 30 வயதை அடையும் பட்ரிக் வியரா கருத்துக்கூறும் போது- நிறையப்பேர் எங்கள் வயதைத்தான் பார்த்தார்கள். ஆனால் இப்போது நாங்கள் மைதானத்தில் என்ன செய்கிறோம் என்று கூர்ந்து பார்க்கிறார்கள். ஆனால், இப்போது சரியான முறையில் பதில் கொடுத்திருக்கிறோம் என்று நினைக்கிறோம்.

இதனை ஆமோதிப்பதுபோல் தியரி ஹென்றி (பிரேசிலைக் கவிழ்த்தவர்) ரசிகர்கள் - எங்களை வயது கூடியவர்கள், முதிர்ந்தவர்கள் என்று கூறிக்கூறியே சித்திரவதை செய்தார்கள். ஆனால் நாங்கள் ஒரு இலட்சியத்துடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தோம். எல்லாவற்றையும் சகித்துக்கொண்டோம்.

ஸ்பானியாவுடன் மிகக்கடுமையான சவாலை எதிர்கொண்டோம். அதனைச் சமாளித்தோம். பிரேசிலுடன் சமாளிப்பது மிகப் பெரிய காரியம். அதனையும் வெற்றிகரமாகச் செய்தோம். அவர்களது கள வியூகங்கள் எல்லாவற்றையும் எதிர்மறை வியூகங்கள் மூலம் கவிழ்த்தோம்.

பிரேசிலை வீழ்த்தியதுதான் உண்மையான சந்தோசம். ஆனால், போர்த்துக்கல் தேசத்தை எதிர்கொள்ளப்போவது மிகக்கடுமையாக இருக்கப்போகிறது. ஒவ்வொரு ஆட்டத்திலும் களத்தில் நிற்கும்போது அது மாபெரும் சவால்தான் என்கிறார்.

உண்மையில் 2006 FIFA இற்கு பிரான்ஸ் வரும்போது சினெடின் சிடேனின் அணி அவ்வளவு கண்டு கொள்ளப்படவில்லைதான். பிரேசில் அல்லது ஜேர்மனியின் பிரபல்யம் பாவம் பிரான்ஸுக்கு இருக்கவில்லை.

ஆனால் உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவராலும் நன்கறியப்பட்ட ஒரு பொக்கிஷம் பிரான்ஸுக்கு இருந்தது. அதுதான் அணித்தலைவர் என்ற பெயரில் சினெடின் சிடேன். அவருடைய மைதான நடவடிக்கைகள், அந்த நட்பு நிறைந்த, எந்தச்சூழ் நிலையிலும் எரிச்சல் தராத புன்னகை, மைதானத்துக்கு அப்பால் பிரான்ஸ் அணியை வளர்ப்பதில் எவ்வளவு பங்கு கொண்டிருக்கும் என்று தெரியவைத்தது.

பிரான்ஸ் என்றால் எல்லோரும் அந்த நாட்டின் ஈபிள் கோபுரத்தைத் தான் நினைவு கொள்வார்கள். ஆனால், இன்று அதைவிட ஒரு உயர்வான நிலைக்கு சினேடின் சிடேன் சென்று விட்டார். பிரான்ஸ் என்றால் சிடேன். சிடேன் என்றால் பிரான்ஸ்.

பிரித்தானிய ரோசாவும் மணக்கும்

இங்கிலாந்தை பெனால்டி முறையில் கவிழ்த்தவர்கள் போர்த்துக்கல் அணியினர். இவர்களது பயிற்றுனர் லூயிஸ் பிலிப் ஸ்கொலாரி. இவர் தனது எதிரணியை மனமாரப் பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்து சிறப்பாகத் தாக்குப் பிடித்தது. இங்கிலாந்து அணிக்கு எனது நல்வாழ்த்துக்கள். பத்துப் பேருடன் அவர்கள் ஆடிய முறை அபாரமானது. இது ஒரு மின் அதிர்வை ஏற்படுத்துவது போன்றதொரு ஆட்டம் என்கிறார் ஸ்கொலாரி. அவர் தொடர்ந்து பேசும் போது பத்துப்பேருடன் விளையாடும் அணிக்கு எதிராக வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள இங்கிலாந்து எங்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் தமது கோல் பகுதியை நன்றாகவே பாதுகாத்தார்கள்.

ஆகவே வியூகத்தை உடைக்க முடியாத நாங்கள் நீண்டதூர உதைகளையே நம்பவேண்டி இருந்தது. இந்த ஆட்டத்தில் சிறப்பு ஆட்டக்காரர் உண்மையில் போர்த்துக்கல் கோல் காப்பு வீரர் ரிக்கார்டோ தான். இங்கிலாந்து அடித்த நான்கு பெனால்டிகளில் மூன்றை ரிக்கார்டோவால் தடுக்க முடிந்தமை அபாரமான சாதனை.

நான் ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். மூன்று பெனால்டிகளைத் தடுத்தேன். என் நாட்டை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினேன் என்கிறார் அவர். இன்னொருவர் போர்த்துக்கல் நாட்டின் இளம் நட்சத்திரம் கிறிஸ்ரியானோ றொனால்டோ.

போர்த்துக்கல் - இங்கிலாந்து ஆட்டத்தைப் பார்த்தவர்கள் மனதில் இவரது மின்னல் வேகச் செயற்பாடு நன்றாகவே கவனத்தை ஈர்த்திருக்கும். மைதானத்தில் இவரைக் கட்டுப்படுத்துவது இங்கிலாந்து வீரர்களுக்குச் சவாலாகவே இருந்தது.

FIFA WORLD CUP GERMANY 2006

இவர் தனது தொடையில் ஏற்பட்டிருந்த காயத்தையும் பொருட்படுத்தாமல் களம் இறங்கியிருந்தார். அவரது வரவு வீண் போகவில்லை. வெற்றியை உறுதிப்படுத்திய பெனால்டியை அநாயாசமாக கோலாக்கியவர் இவர்தான்.

இவரும் இங்கிலாந்து வீரர் வெய்ன் ரூனியும் இங்கிலாந் தின் புகழ்பெற்ற மான்செஸ்ரர் யுனைட்டட் கழக அணிக்காக ஒன்றாக விளையாடுபவர்கள்.

முன்னதாக 2004 ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகளில் கால் இறுதிப் போட்டியில் இந்த இரண்டு அணிகளும் சந்தித்தன. முடிவும் இதே போல போர்த்துக்கலுக்குக் கிடைத்தது.

அங்கு கிரேக்கத்திடம் , இறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல் தோல்வி கண்டது. இங்கும் 2006 FIFA இல் போர்த்துக்கல் எந்த எல்லையைத் தொடும்? சொல்லத் தெரியவில்லை.

பெக்கம் தவறு செய்கிறார்

இங்கிலாந்தின் தேசிய உதைபந்தாட்ட அணியின் பயிற்றுனர் எரிக்சன் காலிறுதியாட்டத் தோல்வியின் பின், தான் பயிற்றுனர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து, இங்கிலாந்தின் தேசிய உதைபந்தாட்ட அணியின் தலைவர் டேவிட் பெக்கம் தானும் இங்கிலாந்து அணித் தலைமைப் பதவியை விட்டு விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

ஆனால், ஒரு ஆறுதல்- தான் அணியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவிக்கவில்லை. கடந்த ஞாயிறன்று பத்திரிகையாளரைச் சந்தித்த அவர் தனது ராஜினாமா பற்றி மிகுந்த துயரத்துடன் எடுத்துக்கூறினார். இதேவேளை, இனி புதிதாக அணியைப் பயிற்றுவிக்க வருபவருக்கும், புதிய அணித்தலைவருக்கும் நான் நிறைய ஒத்துழைப்பும், உதவியும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்றும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார். கடந்த ஆறு வருடங்களாக இங்கிலாந்தின் அணித்தலைவராக கடமையாற்றியவர் டேவிட் பெக்கம். அண்மைக்காலமாக தலைமைப்பதவியிலிருந்து நீங்கிக்கொள்வது பற்றி நான் தீர்க்கமாக யோசித்திருந்தேன். ஆனால், என்காலத்திலும் உலகக் கிண்ணத்தை இங்கிலாந்தை வெல்லச்செய்வதன் பின்னர் ஓய்வு பெறலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், அது சரிவரவில்லை.

சகித்துக்கொள்ளமுடியாத, துயரமான நேரத்தில் எடுக்கப்படும் முடிவுகள் சரியானவையாக அமைவதில்லை. டேவிட் பெக்கம் இப்போது

எடுத்துள்ள முடிவும் அத்தகையதொன்றுதான். கவலைப்பட்ட மனம் தெளிவடையும்போது டேவிட் பெக்கம் போன்றதொரு கண்ணியம் நிறைந்த கனவான், தலைவர் பெரிதாக எதையும் இழந்து விடவில்லை என்பதையும்- வெய்ன் ரூனி உட்பட மிக அருமையான வீரர்களைக் கொண்ட இங்கிலாந்து அணியை 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு வழி நடத்திச்செல்ல தனது தேவை எவ்வளவு முக்கியம் என்பதையும் அவர் உணர்ந்து கொள்வார்.

அப்படியான வேளையில் இங்கிலாந்து அணியைத் தான் கைவிடக் கூடாதென்று உணர்வார். ஏனெனில், டேவிட் பெக்கம் என்பவர் கோல் அடிக்கும் முன்வரிசை வீரர் என்பதற்கும் அப்பால் நிறைய விடயங்களைத் தன்னகத்தே கொண்டவர்.

இன்றைய ஆட்டம்

அரையிறுதியாட்டம்

இத்தாலி - ஜேர்மனி (டோட்மண்ட் 12.30)

ஜேர்மனியில் தமிழ் சினிமா

2006 FIFA ஆட்டங்களைப் பார்த்த ரசிகர்களுக்கு மத்தியஸ்தர்கள் சில சந்தர்ப்பங்களில் நடுநிலையாக நடக்கவில்லையோ என்ற சந்தேகம் எழுந்தது என்னவோ உண்மைதான். இப்போது அந்த விடயம் பெரிய சர்ச்சையை உண்டுபண்ணிவிட்டது.

இதிலென்ன பிரச்சினையென்றால், நடுவர் பட்சபாதமாக நடக்கின்றாரா அல்லது வீரர்கள் தம்பக்கம் கோல் விழுந்துவிடாமல் பாதுகாக்க எதிரணி வீரர்களை வீழ்த்தும்முறை தவறுதலில் ஈடுபடுகிறார்களா அல்லது ஒரு அணியின் வீரர் நெருக்கமாக வந்து ஆடும்போது அவர் உதைத்து விட்டார், தடுக்கிவிட்டார் என்பது போன்ற அபிப்பிராயத்தை மத்தியஸ்தருக்கு ஏற்படுத்த எதிரணி வீரர் வேண்டுமென்றே DIVE அடித்து, உயிரே போவது போன்ற பாவனையை ஏற்படுத்துகிறாரோ என்று பல திசைகளில் விரிந்து செல்கின்றன.

இவற்றையெல்லாம் தம் மதிநுட்பத்தால் சமாளித்த மத்தியஸ்தர்களை FIFA இன் தலைவர் செப் பிளாட்டரும் குறை கூறியது அவர்களுக்கு ரொம்ப வெறுப்பேற்றிவிட்டது.

இம்முறை மஞ்சள் அட்டை, சிவப்பு அட்டை கூடுதலாகப் பாவித்த நிலையில் - நடுவர்கள் தொடர்பில் சந்தேகங்கள் கூடுதலாக எழுந்துள்ளன. ஆனால், வீரர்களின் அத்துமீறலும், நடிப்பும்தான் இதற்கான காரணம் என்பது பெரிதும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

ஆசிரியர் மாணவனின் நன்மைக்குத் தண்டித்தால், மாணவர்கள் எங்கோ போய் முறையீடு செய்வதால் கல்வி உலகுக்கு ஏற்படும் வெறுப்புக்கும், மத்தியஸ்தரின் ஆதங்கத்துக்கும் பெரிய வேறுபாடில்லை.

பரிசுத்த ரோம ராஜ்ஜியத்தில் இரண்டு அடிமைகளை அடிபட வைத்து வேடிக்கை பார்க்கும் வரலாறுபோல், மைதானத்தில் குரூரமாக காலாலும், உடலாலும், கையாலும் வீரர்களை வீழ்த்துவதை நடுவர் கண்டும் காணாமலும் இருக்கவேண்டும் என்று அணியினர் விரும்புகிறார்களா? இப்படியான வினாக்களை ரசிகரகளாகிய நாங்களும் கேட்க வேண்டித்தான் இருக்கிறது.

FIFA இற்கு இந்த விடயத்தில் நடுவர் சபையின் தலைவர் சூடாகப் பதில் கொடுத்துள்ளார். தொண்ணூறு வீதமான தீர்ப்புகள் சரியாக வழங்கப்பட்டுள்ள நிலையில் மொத்தமாக குற்றம்காண விளைவது நியாயமல்ல என்கிறார் அவர். மேலும் மஞ்சள் அட்டை காட்டவேண்டிய பல சந்தர்ப்பங்களில் FREE KICK கொடுத்து மத்தியஸ்தர்கள் மென்போக்கைக் கடைப்பிடித்திருப்பதையும் அவர் கூட்டிக்காட்டத் தவறவில்லை.

இன்னொரு விடயமும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதாவது தோற்றுப்போன அணிகள்தான் கூடுதலாக வுரிந்துகட்டிக்கொண்டு நடுவர் மீது பாய்கிறார்கள். அதே அணி தனக்குக் கிடைத்த இன்னொரு வாய்ப்பை வலைக்குள் தள்ளியிருந்தால் வெற்றி என்ற நிலைக்குள் நின்று கொண்டு நடுவர்கள் நீதித் தேவதைகள் என்று கூறிவிடுவார்கள் என்கிறார்.

மொத்தத்தில் பார்க்கும்போது 2006 உலகக்கிண்ண ஒவ்வொரு போட்டியிலும் முரட்டுத்தனம் கூடுதலாகத் தெரிந்தது என்பது உண்மை. இல்லாவிட்டால் இத்தனை அட்டைகள் காட்டப்படவேண்டிய அவசியம் எழுந்திருக்காது.

யேசுநாதர் கூறியதுபோல தன் மீது குற்றம் ஏதும் இல்லையென் பவன், முதல் கல்லை எடுத்து எறியட்டும் என்றபடி, மத்தியஸ்தர்களை நோக்கி விரல் சுட்டுமளவுக்கு எந்த அணியும் புனிதமானதல்ல. எந்த அணியாவது இதனை மறுக்கமுடியுமா?

பாதுகாப்பு குறைபாடுகளே பரமி கொலைக்கு காரணம்

இராணுவ வட்டாரங்கள் விசனம்

கொழும்பு

பரமி குலதுங்க படுகொலை செய்யப்பட்டதற்கு இராணுவம் அவருக்கு வழங்கவேண்டிய பாதுகாப்பு வசதிகளைச் செய்து கொடுக்காததும் ஒரு காரணம் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உயர் இராணுவ அதிகாரிகளை இலக்கு வைத்து தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்ற பீதி பரவலடைந்துவரும் வேளையில், பரமி குலதுங்க தனக்கு இராணுவ தலைமைப்பீடத்தின் வளாகத்திலுள்ள அதிகாரிகள் தங்குமிடத்தில் ஒரு வீட்டைத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதை இராணுவ தலைமைப்பீடத்தினர் நிராகரித்து விட்டனர் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ அதிகாரிகள் வரிசையில் இரண்டாம் இடத்திலுள்ள மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தனக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் இருந்து வருவதாகத் தலைமைப்பீடத்திடம் முறையிட்டு, இராணுவத் தலைமைப்பீட வளாகத்தில் அதிகாரிகள் தங்குமிடத்தில் வீடொன்றைத் தருமாறு கோரியிருந்தார். இதனையடுத்து அப்போது இராணுவ தளபதியாகவிருந்த லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் பரிந்துரையின் பேரில் அவருக்குக் கடந்த மாதம் இராணுவத் தலைமைப்பீட வளாகத்தில் வீடொன்று வழங்கப்பட்டது.

நந்த மல்லவராச்சியின் வழியில் அண்மையில் கோரிக்கை விடுத்த அவருக்கு - அடுத்த நிலையிலுள்ள பரமி குலதுங்கவுக்குத் தலைமைப்பீட வளாகத்தில் அதுவும் கொடுக்கக் கூடிய வசதி இருந்தும் ஏன் வீடு வழங்கப்படவில்லை என்று இராணுவ வட்டாரங்களில் பரவலாகக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

பரமி குலதுங்க படுகொலையை அடுத்து ஜனாதிபதி மகிந்தவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சரத் பொன்சேகா - மேற்கொண்டு எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பேசிவிட்டு, இராணுவத் தலைமையகத்தில் தொடரும் பிடுங்குப்பாடுகளும், பிணக்குகளும் உயர் அதிகாரிகளின் உயிருக்கு உலைவைக்கக் காரணமாகி விடுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

பரமி குலதுங்கவுக்கு தலைமைப்பீட வளாகத்தினுள் வீடு கொடுக்கப்படாதது குறித்து அறிந்த ஜனாதிபதி, அது தொடர்பாக இராணுவ தலைமைப்பீடத்தினரை விசாரித்துள்ளார்.

இதேவேளை, இராணுவ தலைமைப்பீட வளாகத்திலுள்ள அதிகாரிகள் தங்குமிடத்திலுள்ள வீடுகளில்- அண்மையில் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வெளியேறியதால் அந்த வீடு வெறுமையாகவுள்ளது.

இன்னொரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கெனப் பாரிய செலவில் திருத்தப்பட்ட வீடு, தனக்கு அங்கு வீடு வேண்டாம் என்று அந்த அதிகாரி அறிவித்த பின்னரும் எவருக்கும் வழங்கப்படாமல் வெறுமையாக வுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, கடந்த ஜனவரி மாதம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர உயர் இராணுவ அதிகாரி ஒருவர் வெளியில் போனால் தனக்கு ஜே.வி.பியினரால் உயிருக்கு ஆபத்து என்று கூறிக்கொண்டு இன்னமும் இராணுவத் தலைமைப்பீட வளாக வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார் என்று இராணுவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவற்றைப் பார்க்கும் போது பரமி குலதுங்கவுக்கு அங்கு வீடு கொடுத்திருக்கவேண்டும் என்று கூறியுள்ள பாதுகாப்பு வட்டாரங்கள், அவ்வாறு வழங்கப்படாததால் பனாகொட இராணுவ அதிகாரிகள் குடியிருப்புத் திட்டத்திலுள்ள தனது வீட்டிலிருந்து 28 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கொழும்பு இராணுவத் தலைமையத்துக்கு சுமார் இரண்டு மணிநேரம் பயணம் செய்து வந்து சென்றுள்ளார்.

ஒரு நாளில் நான்கு மணிநேரம் தெரு விலேயே நிற்கும் உயர் அதிகாரியை இலக்கு வைப்பது எதிரிக்குச் சுலப மாகிப்போய்விட்டது.

தனது இந்த பாதுகாப்பு அச்சுறுத்தல்மிக்க பயணத்தை உணர்ந்து, பரமி குலதுங்க தனது பயண வாகனங்கள், பயணப்பாதைகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பவற்றில் தினமும் மாற்றங்களைச் செய்து கொண்டுவந்தார்.

அப்படியிருந்தும் அவர் மீது கனகச்சிதமாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

போலிச் சான்றிதழ்களை தயாரித்தவர் கைது

கொழும்பு

கொழும்பு - பொரளைப் பிரதேசத்தில் போலிச் சான்றிதழ் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடத்தி வந்தவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகச் சான்றிதழ்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டு வந்ததாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அங்கிருந்த நபர்களை கைது செய்தனர். அங்கு போலிறப்பர் முத்திரைகளும், பாடசாலைக் கல்விச் சான்றிதழ்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் கொழும்பு தெற்கு விசேட சோதனைப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பதுளையில் தேடுதல் 25பேர் கைது!

கொழும்பு

பதுளையில் பொலிஸார் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 5 யுவதிகள் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பதுளையிலுள்ள தோட்டப் பிரிவுகளில் மேற் கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார்கள் என்று தெரியவரவில்லை.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களில் தேவமகேந்திரன் என்பவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய 24 பேரும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தேவை ஏற்படின் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முத்தலிப் பற்றிய தகவல்களுக்காக புலிகள் செலவழித்த ரூ. 13 லட்சம்!

கொழும்பு பத்திரிகை தகவல்

கொழும்பு

கொழும்பிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தமக்குத் தேவையான வாறு இலக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தாக்குவதற்குத் தென்னிலங்கை மக்களை விலைக்கு வாங்கும் விடுதலைப் புலிகள்-

கடந்த வருடம் இராணுவப் புனைாய்வுத்துறை அதிகாரியான முத்தலிப்பை கொலை செய்வது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு 13 லட்சம் ரூபாவை கைமாற்றியுள்ளனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முத்தலிப் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் புனைாய்வுத் துறையினருடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று படையினர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கொழும்பு துறைமுகம் மீதான தாக்குதல் முயற்சியிலும், விடுதலைப் புலிகள் நீர்கொழும்பிலுள்ள மீனவர்களுக்குப் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பான வீடு ஒன்றைப் பெற்றுக் கொண்டதுடன், தமக்குத் தேவையான வெடிபொருள்களை அந்த வீட்டுக்கு கொண்டு வந்து அங்கிருந்து தாக்குதல் திட்டங்களை வகுத்ததாகவும், நிக்சன் என்ற தாக்குதல் பொறுப்பாளரே அங்கிருந்து வன்னியிலுள்ள கடற்புலிகளின் தளபதி சூசையுடன் தொடர்புகளைப் பேணியதாகவும் தெரியவந்துள்ளது.

இதனிடையே கடந்த வாரம் திருகோணமலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர் மூலம் பல தகவல்கள் தெரியவந்துள்ளது. இராணுவ கப்டன் ஒருவரிடம் இருந்தும், தொண்டர் படைச் சிப்பாய் ஒருவரிடமிருந்தும் பல பெறுமதியான தகவல்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்ததாக அந்தப் விடுதலைப் புலி உறுப்பினர் விசாரணைகளின் போது கூறியுள்ளார்.

இராணுவம் வகுக்கும் திட்டங்கள் மற்றும் வியூகங்கள் ஆகியவற்றை உடனுக்குடன், விரிவான விளக்கங்களுடன், இடங்கள் பற்றிய விபரங்களுடன் அந்த இராணுவ கப்டன் தனக்குத் தருவதாக அந்த விடுதலைப் புலி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் அந்த விடுதலைப் புலி உறுப்பினரை வைத்தே அந்த இராணுவ கப்டனுக்கு வழமை போன்று தொலைபேசியில் கடற்படையினர் பேசவைக்க- விடயம் தெரியாத இராணுவக் கப்டன் வழமை போலவே சம்பந்தப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரைத் தன்னை சந்திக்க வருமாறு அழைத்துள்ளார்.

அங்கு விடுதலைப்புலி உறுப்பினருடன் சென்ற கடற்படையினர் அந்த இராணுவக் கப்டனை கைது செய்ததுடன், அவரை இராணுவ புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

புதிய வகையான பெற்றோல் ஓட்டோக்களுக்கு தயாரிப்பு!

கொழும்பு



மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றுக்கு பயன்படுத்துவதற்கெனப் புதிய வகையான பெற்றோல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கனியவள அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒக்ரேன் 86, 87 என்ற புதிய ரக பெற்றோலைப் பயன்படுத்தி, வாகனங்களை எவ்வளவு தூரம் பயணிக்கச் செய்யலாம் என ஆராயப்பட்டுவருகிறது.

இந்தப் புதிய வகைப் பெற்றோலின் மூலம் பாவனையாளர்கள் அதிகளவில் நன்மை அடைவார்கள் எனப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ. எச்.எம். பௌசி தெரிவித்தார்.

இந்தப் பெற்றோல் பரீட்சார்த்தமாக இன்று 25 ஓட்டோக்களுக்கு வழங்கப்படவுள்ளது. அது வெற்றி பெற்றால் - இந்தப் பெற்றோல் புதிய திட்டத்தினூடாக விநியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுநர் நியமனம்; நாடாளுமன்ற விசாரணைக்கு கோரிக்கை

கொழும்பு

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டது மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுனில் மெண்டிஸின் பதவி விலகல் விடயங்கள் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக் குழுவினரை நியமிக்குமாறு ஐ.தே.கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்துக்கு யோசனை சமர்ப்பித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, பீ.தயாரத்ன, ரஞ்சித் அலுவிகார, தயாசிறி ஜயசேகர, டபிள்யு.பீ.ஏக்கநாயக்க, லக்ஸ்மன் செனவிரத்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, தர்மதாச பண்டா, நியோமல் பெரேரா ஆகிய உறுப்பினர்களால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணசபை உறுப்பினராக இருந்த அஜித் நிவாட் கப்ரால் கடந்த பொதுத் தேர்தலின் போது கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டார் என்றும், அரசியல் கட்சியின் அமைப்பாளராக இருந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - அவர் பிரமீட் திட்டம் என்றழைக்கப்படும் சட்டத்துக்கு உட்படாத பணக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருந்தவர் என்றும் தெரிவித்தனர்.

ஆகையால், முன்னாள் ஆளுநர் சுனில் மெண்டிஸ் எதற்காகப் பதவி விலகினார்? மத்திய வங்கி ஆளுநராவதற்கு அஜித் கப்ராலுக்கு இருக்கும் தகுதிகள் என்ன? மற்றும் அவரைப் போன்ற ஒருவர் அந்தப் பதவிக்கு வருவதனூடாக மத்திய வங்கியின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படுமா? என்பது பற்றியும் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன என்பது பற்றியும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் ஆராயப்பட வேண்டும் என்று அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுடன் தொடர்புடைய 95 பேர் விபரம் மகிந்தவிடம்!

கொழும்பு

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்கும் 10 அரசியல்வாதிகள் மற்றும் 85 அரச அதிகாரிகளின் விபரங்களை மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய முடிவு செய்துள்ளது.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கூறியதாவது -

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்கும் அரச அதிகாரிகளிடையே படையினர் சிலரும் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.



தற்போது கிடைக்கப் பெற்றிருக்கும் தகவல்கள் தொடர்பாக மேலும் விபரங்களைத் தீரட்டி அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்த பின்னர் மகிந்தவிடம் விபரங்கள் கையளிக்கப்படும் என்றார் அவர்.

எல்லைக் கிராமங்களை காக்க தேசிய சக்தி பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு

அச்சுறுத்தலுக்குள்ளான கிராமங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கெனத் தேசிய சக்தி என்ற பெயரில் துரித பாதுகாப்பு திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பற்ற கிராமங்களின் நிலைமை குறித்து ஆராயவும், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுவருகிறது.

தேசிய சக்தி என்ற பிரதான குழுவையும் அரசியல் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றையும் வலய மற்றும் மாவட்ட அடிப்படையில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் அமைவாக குறித்த பிரதேசங்களில் நெடுஞ்சாலைகள், சுகாதாரம், கல்வி மற்றும் மீள்குடியேற்றம் போன்றவை குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்த அமைப்பை நிறுத்துவதற்கான கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை பொலநறுவையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், கூட்டுப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அச்சுறுத்தலுக்குள்ளான கிராமங்களில் ஊர்காவல் படையினரின் எண்ணிக்கையை உயர்த்துவது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான காலத்தில் புலிகள் மீதான தடை தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி அளித்தது!

விடுதலைப் புலிகள் ஏட்டின் பிரதம ஆசிரியர் ரவி

வட்டக்கச்சி

சமாதானப் பேச்சை முன்னெடுத்த காலத்தில் சிங்கள அரசு எதனையுமே செய்ய முடியாத நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடையை விதித்தமையானது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை அளித்தது உண்மையென விடுதலைப் புலிகள் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ரவி தெரிவித்தார்.

இராமநாதபுரம் நிருசுதா பயிற்சிப் பாசறையில் மக்கள் கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானப் பேச்சுவார்த்தை முடிவடைந்து போர் தொடங்கப் போகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் குறித்து விடுதலைப் புலிகள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இது போன்ற தடைகளை நாம் பல தடவை சந்தித்துள்ளோம்.

தடைகளுக்கும் - நீதி நியாயங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. ஒரு எழுந்தமானத்தில் சர்வதேச அரசியலை முதன்மைப்படுத்தி, இவ்வாறான தடைகள் வருகின்றன. இதை நாங்கள் பொருட்படுத்தத் தேவையில்லை.

தற்போதைய தமிழ் மக்களின் எழுச்சி சர்வதேச சமூகத்துக்கு ஒரு பாடத்தைப் புகட்டி வருவதுடன், சிங்கள அரசுக்கும் அந்த நிலையை ஏற்படுத்தியுள்ளதென்பதே உண்மையாகும்.

இன்று தடைவிதித்த நாடுகளே இங்கே வந்து எம்மீதான தடை ஒரு புறம் இருக்கட்டும் - சமாதான முயற்சியை தொடரலாமென கூறும் அளவுக்கு எமது மக்களின் எழுச்சி பக்கபலமாக நிற்கிறது. நீண்டகால சமாதான முயற்சிக்குப் பின்னாலும் எமது மக்கள் போர் முனைப்புடன் விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென நிற்பது உலக அதிசயம் என்று தான் கூறவேண்டும்.

இதே போன்றே விடுதலைப் புலிகளும் பலமிழக்கவில்லை. மேலும் மேலும் பலமாகவே உள்ளனர். எனவே, இனிவரும் போரென்பது இறுதிப் போராக, எமது மக்களின் தலைவிதியை தீர்மானிப்பதாக அமையவுள்ளது.

கொழும்பில் தாக்குதல் நடைபெற்றால் எமது தாயகப்பிரதேசத்தில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஆனால், அண்மையில் கொழும்பில் பிரதி இராணுவத் தலைமை அதிகாரி பரமி குலதுங்க மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து விமானத்தாக்குதல் நடத்தப்படவில்லை ஏனெனில் இராணுவம் அச்சத்துடன் உள்ளது. எம்முடன் தனித்து நின்று போர் புரிந்து வெல்லலாம் என்ற நம்பிக்கை இராணுவத்திடம் இல்லை.

எனவே, இந்த நிலையைக் கருத்தில் கொண்டு எமது விடுதலையை விரைவாக பெற்றெடுக்க தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோமென அவர் மேலும் தெரிவித்தார். (09)

காணாமற்போன மீனவரை கண்டுபிடிப்பதற்கு தேடுதல்

மன்னார்

மன்னார் பேசாலை கடற்பரப்பில் கடற்படையினரால் கடந்த சனிக் கிழமை தூக்கி வீசப்பட்டு காணாமற் போன இப்ராகிம் ஆசிக் (வயது 34) என்ற மீனவரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அரச அதிகாரிகளுடாக கடற்படையினரிடம் இதற்கான அனுமதியைப் பெற்றதைத் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரிசல்பாட்டிலிருந்து கரிசல் மீனவர்களின் 12 படகுகளும் புதுக்குடியிருப்பு மீனவர்களின் 13 படகுகளுமென மொத்தம் 25 படகுகளில் வெள்ளைக் கொடிகளைக் காட்டியவாறு நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு குறித்த மீனவரைத் தேடி அந்தப் பகுதி மீனவர்கள் சென்றனர்.

இவர்கள் எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை, விடத்தல்தீவு, நாச்சிக்குடா, நெடுந்தீவு ஆகிய கடற்பகுதிகளில் தேடுதல் நடத்தினர். மிகவும் அனுபவம் வாய்ந்த சுழியோடிகளும் இந்தப் படகுகளில் சென்றனர். எனினும் காணாமற்போன மீனவர் மீட்கப்பட்டாரா என்பது குறித்து எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.

மேஜர் வன்சியின்பனின் நினைவுக்கல் திரைநீக்கம்

கிளிநொச்சி

கடற்கரும்புலி மேஜர் வன்சியின்பனின் நினைவுக்கல் திரை நீக்கம் நிகழ்வு முல்லைத்தீவு ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது. முன்னதாக மல்லாவி மாவீரர் மண்டபத்தில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

அரசியல்துறைப் போராளி சுடர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரை பெற்றோர் ஏற்றி வைக்க, மலர் மாலையை மாவீரரின் சகோதரர்கள் அணிவித்தனர்.

நிகழ்வில் நினைவுரையை மல்லாவிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம், பாண்டியன்குளம் அரசியல்துறைப் பொறுப்பாளர் இலக்கியன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை கடற்கரும்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் நிகழ்த்தினார். தொடர்ந்து திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களின் இசை அணிவகுப்புடன் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (கு)

கடற்சமரில் வீரச்சாவைத் தழுவிய மாவீரரின் நினைவுக்கல் திரைநீக்கம்

கிளிநொச்சி

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கடற்படையினருடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி லெப்.கேணல் புரட்சிநிலவன், கடற்புலி மேஜர் கடல்வீரன் ஆகிய மாவீரர்களின் நினைவுக்கற்கள் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

மாவீரர்களது திருவுருவப்படங்கள் அவர்களது இல்லங்களில் இருந்து எடுத்து வரப்பட்டு ஆழியவளை பாடசாலையில் மக்களின் இறுதி வணக்க நிகழ்வுக்காக வைக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் வணக்க நிகழ்வு நடைபெற்றது.

மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களது தாய்மார்கள் சுடர் ஏற்றினர்.

மலர் மாலைகளை யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி கலாத்தன், தளபதி இளங்கோ ஆகியோர் அணிவித்தனர்.

தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் இசையூரன் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கற்கள் பூரண இராணுவ மரியாதைகளுடன் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

மன்னாரில் புதிய காவலரண்கள்; அச்சத்தால் மக்கள் இடம்பெயர்வு

மன்னார்

மன்னாரில் படையினர் புதிதாக காவலரண்களை அமைத்து வருவதால் அச்சமடைந்த அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி வருகின்றனர்.

இதன்படி மன்னார் பொது விளையாட்டரங்க மைதானத்துக்கு அருகில் இராணுவத்தினர் காவலரண் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதால் இந்த மைதானத்தில் இடம்பெறவிருந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் மன்னார் அஸ்ஷர் நவோதய பாடசாலை மைதானத்துக்கு மாற்றப்பட்டது.

பொது விளையாட்டரங்க மைதானத்துக்கு அருகில் ஏற்கனவே இருந்த காவலரண் மீது அண்மையில் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றதையடுத்து பாடசாலைகளில் மாணவர் வரவு வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இந்தக் காவலரணுக்கு அருகிலுள்ள ஐந்து கடைகளும் மூடப்பட்டுள்ளன.

மன்னார் வைத்தியசாலைக்கருகில் பாரிய காவலரண் ஒன்றை இராணுவத்தினர் அமைத்துள்ளதால் எழுத்தூர் வீதி, எழில்நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 14 குடும்பங்கள் இரவு நேரங்களில் வேறு இடங்களுக்கு சென்று தங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர்க்கலையில் வல்லுநராக இருந்தால் எதிரி தமிழரைத் தோற்கடிக்க முடியாது!

கிளிநொச்சி

ஒவ்வொரு தமிழனும் போர்க் கலையில் வல்லுநராக இருந்தால் எதிரி எம்மை இலகுவில் தோற்கடித்து விடமுடியாது என கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தெரிவித்தார்.

லெப்ரினன்ட் கேணல் திருவடி பயிற்சிப் பாசறையின் எட்டாவது அணிக்கான பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தற்போது தமிழ் மக்கள் போர்த் திறன் மிக்கவர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சமாதான காலத்தில் அரசாங்கம் 650 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றும், 250 இற்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதற்கும் காரணமாக இருந்தது.

எனவே, ஒவ்வொரு தமிழனும் போர்க் கலையில் வல்லுநராக இருக்கும் போது எதிரி தமிழினத்தை அடக்கி விடமுடியாது என அவர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பயிற்சி ஆசிரியர் மனோ தலைமையில் ஆரம்பமானது. நிகழ்வில் பொதுச்சுடரை - புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றினார்.

லெப்ரினன்ட் கேணல் திருவடியின் படத்துக்கு ஈகச்சுடரை மணலாறு பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அரசிவந்தன், முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் மரியராசா ஆகியோர் ஏற்றினர்.

நிகழ்வில் சிறப்புரைகளை, நா. தமிழன்பன், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்காக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

பின்னர் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (கு)

அத்தியாவசிய சபை குழுக்கூட்டம்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சபைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு செயலக பொது நோக்கு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தற்போது மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற மக்களுடைய அத்தியாவசிய தேவைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு குழந்தைகளின் சிகிச்சைக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியுதவி

கிளிநொச்சி

அவசர இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வேண்டியுள்ள இரண்டு குழந்தைகளின் மருத்துவ சிகிச்சைக்காக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

நிறு வனத்தின் அவசர மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் இந்த நிதியுதவி வழங்கப்பட்டதாக தமிழர் புனர் வாழ்வுக் கழகச் செய்திகள் தெரிவித்தன.

யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான ஜெயராசாவின் இரண்டு மாதக் குழந்தை ஜோன்சனின் இருதய சத்திர சிகிச்சைக்கு ரூபா நான்கு இலட்சம் வழங்கப்பட்டது. இதனை குழந்தையின் பெற்றோரிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் ரோறன்ஸ் கிரிஸ்ரி வழங்கினார்.

போராலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களின் அவசர மருத்துவ தேவைக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இந்தத் திட்டம் உதவுகிறது.

பயிற்சிநெறி ஆரம்பம்!

கிளிநொச்சி

டபிள்யூ.யு.எஸ்.சி. நிதியுதவியுடன் முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரியால் நடத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரம் திருத்துவதற்கான பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று மாலை 2.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் நாடகப் பட்டறை மூன்றாம் அணியின் பயிற்சி நிறைவு

கிளிநொச்சி

கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் சிறுவர் நாடகப் பட்டறை தொகுதி மூன்றாம் அணியினருக்கான பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கலும் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றன.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் நுண்கலைப் பிரிவுப் போராளி முல்லை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை நாடக ஆசிரியர் க.ஆதவன் ஏற்ற தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றினார்.

இதனையடுத்து பயிற்சியை நிறைவு செய்த சிறார்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கரவெட்டி மக்களின் நீண்டநாள் கனவு தற்போது நனவாக்கப்பட்டுள்ளது!

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

நெல்லியடி

கரவெட்டி மக்களின் நீண்டநாள் கனவு நனவாக்கப்படுவதோடு, சமூக வாழ்வியலோடு இரண்டு முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் காலம் இது எனவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கரவெட்டி பகுதியில் இடம்பெற்ற குடிநீர் விநியோக, நீர் சுத்திகரிப்பு இயந்திர அங்குரார்ப்பண நிகழ்விலும், கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கான அடிக்கல் நாட்டு நிகழ்விலும் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

எமது மக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை தமது வாழ்வியலைத் துன்பியலோடு வாழ்ந்து வந்துள்ளனர்.

குடிநீருக்காக பல மைல்களுக்கு அப்பால் காலை, மாலை என பெண்கள், ஆண்கள், குழந்தைகள், வயோதிபர் என பலரும் குடங்களுடன் சென்று குடிநீர் எடுத்து வந்துள்ளனர்.

ஆனால், இந்த துன்பம் இப்போது நீங்கியுள்ளது. இந்த ஊர் மக்களைப் பொறுத்தவரையில் மக்கள் போராட்டம் வெற்றியளித்துள்ளதென்றே கூற வேண்டும்.

மேலும், பல சவால்களுக்கு முகம் கொடுத்தே இந்த இயந்திரம் இங்கு பொருத்தப்பட்டுள்ளது. இதனால் வழங்கப்படுகின்ற நீரின் அளவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து அளவுக்கதிகமாக நீரைப் பெற முயன்றால் இது உவர் நீராக மாறும் சந்தர்ப்பமுண்டு.

இதனைத் தீர்ப்பதற்கு இங்கு இருக்கும் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு அரச அதிபரிடம் கோரியுள்ளோம்.

எனவே இந்த நீரை குடிநீருக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

இதேபோல் எமது அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வெளிநோயாளர் பிரிவுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றுள்ளது.

இவ்வளவு காலமும் இந்தப் பகுதியில் இயங்கிவந்த வைத்தியசாலையில் இடவசதி இன்மை காணப்பட்டமையால் அதனைப் புனரமைப்பதற்கான வசதிகள் எம்மால் செய்யமுடியாமல் இருந்தது.

இதற்கு போரூட் நிறுவனத்தினர் 5 லட்சம் ரூபா செலவில் சுற்றுமதில் அமைத்துத் தந்துள்ளனர். இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுடன் மகப்பேற்று நிலையம், பற்சிகிச்சை நிலையம் என்பவற்றையும் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இதனால் கரவெட்டி மக்கள் பெரும் நன்மையடைவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கிகள் தேசநிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பாலச்சந்திரன், யாழ். தேசிய நீர்வடிகாலமைப்பின் முகாமையாளர் ரி. பாரதிதாசன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கான அடிக்கல்லை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குமாரவேலுப் பிள்ளை நாட்டிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து கட்டட நிர்மாண அமைப்பாளர், நிகொட் நிறுவனப் பணிப்பாளர், கரவெட்டி பிரதேச செயலர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, கொழும்பு தேசநிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர், வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி, அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், தோட்ட ஒப்பந்தகாரர்கள் எனப் பலரும் அடிக்கல் நாட்டி கௌரவித்தனர். (12)

நவோதய வாரம்

யாழ்ப்பாணம்

யாழ். வலய நவோதய பாடசாலைகளில் நவோதய வாரம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

இந்த வாரத்தை முன்னிட்டு நவோதய பாடசாலைகளில் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் சிரமதானம் நடைபெறவுள்ளது.

யாழ். வலயத்தில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே நவோதய வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நவாலி சென்.பீற்றர்ஸ் படுகொலை பதினோராம் ஆண்டு நினைவுதினம்

யாழ்ப்பாணம்

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப்படை நடத்திய தாக்குதலின் பதினோராம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி வலிகாமம் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயம் ஆகிய இடங்களில் தங்கியிருந்தனர்.

இந்த மக்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 147 பேர் உயிரிழந்ததுடன், 320 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கோரத் தாண்டவத்தில் உயிரிழந்தவர்களின் பதினோராம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயம், சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் விசேட பூசைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பஸ் சாரதி படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து போக்குவரத்து சபை சாரதிகளின் வேலைநிறுத்தம் காரணமாக நேற்று யாழ். மத்திய பஸ் நிலையம் பஸ்கள் எவையுமின்றி வெறிச்சோடிக் காணப்படுவதையும், மக்கள் தனியார் பஸ்களில் பிரயாணம் மேற்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள் - விபுலன், கஸன்)

படையினரின் சுற்றிவளைப்பால் விவசாயிகள் பெரும் பாதிப்பு!

யாழ்ப்பாணம்

குடாநாட்டில் திடீர் திடீரென படையினர் மேற்கொள்ளும் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல்களால் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குடாநாட்டில் விவசாயிகள் அதிகாலைவேளையில் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக செல்கின்ற வேளையில் - படையினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் செல்வோரை நீண்டநேரமாக மறித்து வைத்திருப்பதால் உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது.

இதனால் உற்பத்திப் பொருட்களை குறைவான விலையில் விற்கவேண்டிய நிலை ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, உற்பத்தியாளர்கள் மட்டுன்றி வியாபாரிகளும் படையினரின் இத்தகைய செயற்பாட்டால் தொழில் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக கவலை தெரிவித்தனர்.

பணிக்கொடை வழங்கப்படாமையால்

மறியல் போராட்டம் நடத்துவதற்கு இ.போ.ச முன்னாள் ஊழியர்கள் முஸ்தீபு

நெல்லியடி

60 வயதில் ஓய்வு பெற்ற போக்குவரத்து சபை ஊழியர்களின் பணிக்கொடை வழங்கப்படாததால் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய தலைமைப் பணிமனையின் முன்பு மறியல் போராட்டம் ஒன்றை நடத்த அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையில் பணிபுரிந்து 60 வயதில் ஓய்வு பெற்ற வட பிராந்தியத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஒரு வருடம் கழிந்தும் தமது பணிக்கொடையைப் பெறாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பல தடவைகள் போக்குவரத்துச் சபை அதகாரிகளிடம் முறையிட்ட போதும் பலன் ஏதும் கிடைக்காத பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரிடம் இது பற்றி பிரஸ்தாபித்திருந்தும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, கோண்டாவில், காரைநகர் மற்றும் பிராந்தியப் பணிமனைகளைச் சேர்ந்த இந்த ஊழியர்களின் மறியற் போராட்டம் தொடர்பாக போக்குவரத்து சபைத் தலைவர், போக்குவரத்து அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர், தொழில் ஆணையாளர், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் - இதன் பிறகும் தமக்கு எதுவித சாதகமான பதில் கிடைக்காது போனால், தாம் மறியல் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

மேலும், இந்த ஊழியர்கள் இளைப்பாறி 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டிய பணிக்காலக் கொடுப்பனவு - ஒருவருட காலம் கழிந்தும் வழங்கப்படாமை பாரதூரமான உரிமை மீறல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பொறியியல் பகுதி ஊழியர்கள், நடத்துனர்கள், சாரதிகள், சாலைப் பரிசோதகர்கள், சாலை முகாமையாளர்கள் மற்றும் களஞ்சியப்பகுதி அதிகாரிகள் போன்ற சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(12)

வல்லைப் பகுதியில் படையினரின் சோதனைக் கெடுபிடி அதிகரிப்பு!

பெண்களுக்கான சோதனைச் சாவடி அமைப்பு

வடமராட்சி

வல்லை - இராணுவ முகாம் பகுதியில் பெண்களை சோதனையிடுவதற்கென புதிதாக சோதனை அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வடமராட்சி, வலிகாமம் பகுதிகளிலிருந்து வல்லை சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்யும் மக்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வல்லை சோதனைச் சாவடி ஊடாக பயணிக்கும் ஆண், பெண் இருபாலரின் அடையாள அட்டைகள் மற்றும் பொதிகள் சோதனை செய்யப்படுவதுடன் ஆண்கள் உடற்சோதனை செய்யப்பட்டும் வந்தனர்.

நேற்றுமுன்தினம் முதல் இராணுவ முகாமுக்கு முன்பாக உடற் சோதனை செய்வதற்கான சோதனை அறை ஒன்றை படையினர் அமைத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களாக இந்த சோதனைச் சாவடியில் இராணுவ பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்யும் மக்கள் இறக்கப்பட்டு, சோதனையின் பின்னர் 50 மீற்றர் தூரம் சென்றே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேபோன்று வலிகாமத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து வடமராட்சிக்கு செல்லும் மக்கள் இறக்கப்பட்டு, சோதனையின் பின்னர் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, இந்த சோதனைச் சாவடியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அச்சுவேலி - வல்லைச் சந்தியிலும் பொதுமக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

புனரமைப்பு செய்யப்படும் ஆரியகுளம், புல்லுக்குளம்!

யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆரியகுளம், புல்லுக்குளம் என்பன நோராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஆரியகுளத்தின் நீர் நிலையை பேணுவதற்கும் அதனை அழகுறவைத்திருப்பதற்குமான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது ஆரிய குளத்துக்கான சுற்றுமதில் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. ஆரிய குளத்தின் வேலைகள் முடிவடைந்தவுடன் புல்லுக்குளம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயுதக் கொள்வனவு மோசடி; சந்தகிரிக்கு அழைப்பாணை!

கொழும்பு

கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவு மோசடி தொடர்பாக முன்னாள் கடற்படை மற்றும் கூட்டுப் படைகளின் தளபதியான றியர் அட்மிரல் தயா சந்தகிரியை விசாரணை ஆணைக்குழு விரைவில் விசாரிக்கவுள்ளது.

தயா சந்தகிரிக்குப் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச்செயலாளர் பொறுப்பு வழங்க உயர் நீதிமன்றம் தடை விதித்த நிலையில் - இந்த அழைப்பாணை அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

தயா சந்தகிரியின் ஊழல்கள் தொடர்பாகப் பொலிஸ் அதிகாரி மற்றும் பிரதி சட்ட மா அதிபர் யசந்த கோடகொட ஆகியோர் அடங்கிய குழுவினர் 2001 ஆம் ஆண்டுக்கும், 2005 ஆம் ஆண்டுக்கும் இடையேயான ஆயுதக் கொள்வனவு ஆவணங்களைப் பரிசீலித்து வருகின்றனர்.

இந்த விசாரணைகளானது - சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த ஆட்சிக் காலத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2003 ஆம் ஆண்டு நவம்பர் வரை கடற்படைக்குப் பாரிய ஆயுதக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த ஆட்சிக்காலத்தில் இந்தக் கொள்வனவுக்குத் தடை விதிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தயா சந்தகிரியின் ஊழல் விசாரணையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கும் அழைப்பாணை அனுப்பக்கூடும் என்று தெரியவருகிறது.

இதனிடையே மற்றொரு மூன்று நபர்களைக் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு வானது ஆனையிறவு முகாம் வீழ்ச்சிக்குப் பின்னைய 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான ஆயுதக் கொள்வனவு குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. அப்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது - ஆயுதக் கொள்வனவு தொடர்பாக மேற்கொண்ட முடிவுகளை இந்தக்குழு ஆராய்ந்து வருகிறது.

அக்குரஸ்ஸவில் கைதானோர் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

கொழும்பு

அக்குரஸ்ஸ பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட 39 தமிழ் இளைஞர்கள் உட்பட 42 பேர் கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 42 பேரையும் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பெற்று, கொழும்புக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் அக்குரஸ்ஸ பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 32 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் 6 பேர் சிலாபம் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் யாப்பு திருத்தத்தை ஐ.தே.க ஆதரிக்கமாட்டாது

கொழும்பு

அரசியல் யாப்பின் 17 ஆவது திருத்தத்தில் மேலதிக திருத்தம் மேற்கொள்ளப்படுவதை ஆதரிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொறடா ஜோசப் மைக்கேல் பெரேரா இது குறித்து கூறுகையில் - அரசாங்கத்தின் இத்தகைய முடிவை நாம் ஆதரிக்க மாட்டோம்.

அரசியல் யாப்பு சபைக்காக 9 பேர் ஏற்கனவே நியமிக்கப்பட்டுவிட்டனர். சிறுபான்மை கட்சி பிரதிநிதிதான் நியமிக்கப்படவேண்டும். இந்த நிலையில் அரசியல் யாப்பு சபையை மீறி பொதுச்சேவைகள், மனித உரிமைகள் ஆகிய சுயாதீன குழுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் நியமித்துள்ளார். ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் பாரிய செயற்பாடு அது.

அதேவேளை மேலதிக மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைப்பதற்கான 18 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்.

இது தொடர்பாக நடைபெறும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் படையணி பயிற்சி பாலித கொகன்ன கவலை

கொழும்பு



விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டு வரும் மக்கள் படையணி பயிற்சிகள் குறித்து கவலைப்படுவதாக சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது-

மக்கள் படையணி பயிற்சி குறித்து சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கும் என்றும் இத்தகைய பயிற்சிகளுக்குத் தடை விதிக்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - படையினர் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த பொதுமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதாக இரண்டாம் நிலைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளி நாட்டவரின் ஊடுருவலை தடுக்கும் முயற்சியில் ஜே.வி.பி

கொழும்பு

இனப் பிரச்சினையில் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவலைத் தடுக்கும் முன்னெடுப்பு என்ற பெயரில் ஜே.வி.பி நடத்த திட்டமிட்டுள்ள தொடர்ச்சியான கட்சி அங்கத்தவர் கூட்டத்தில் இந்தியா உட்பட வெளிநாட்டு சக்திகளை விரட்டியடிக்கும் நோக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் முக்கிய அங்கத்தவர்கள் ஆயிரம் பேர் கூடி கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நடத்தவுள்ள கட்சி உயர்மட்ட கூட்டத் தொடரில் இந்தியா உட்பட அனைத்து வெளிநாட்டு சக்திகளையும் விரட்டியடிப்பதற்கான முயற்சிகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நாளை நடைபெறவுள்ள இந்த உயர் மட்ட மாநாட்டில் இந்திய வல்லாதிக்க சக்தியை முறியடிப்பது குறித்து மிக உன்னிப்பாக ஆராயப்படவுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க குடாநாட்டு படையினர் கோரிக்கை

கொழும்பு

யாழ்.குடாநாட்டில் பணிபுரியும் படையினர் தமது போக்குவரத்து வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாகனப் போக்குவரத்தில் நிலவி வரும் குறைபாடுகள் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் படைத்தரப்பில் 43 ஆயிரம் பேர் கடமை புரிகின்றனர். இவர்கள் பாதுகாப்பு காரணங்களால் யாழ்ப்பாணத்திலிருந்து தென் னிலங்கைக்குத் தரைவழியாக பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்து விமானம் மற்றும் கடல் வழிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய பயணத்தின் போது போக்குவரத்தில் ஏற்படும் முறைப்பாடுகள் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வேண்டியிருப்பதால் தமது விடுமுறை நாட்களில் சில நாட்களை வீணே கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் தகுந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி னால் அது படை யினருக்குப் பெரும் உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத்துறை எச்சரிக்கைகள் 3 காரணங்களால் புறக்கணிப்பு

கொழும்பு

இலங்கையில் பாதுகாப்புத்துறையில் புலனாய்வு எச்சரிக்கைகள் மூன்று காரணங்களால் வெற்றியளிக்கவில்லை என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

புலனாய்வு எச்சரிக்கைகள் படைத்துறையின் அனைவருக்கும் சென்று சேரவில்லை. எச்சரிக்கைகள் உரிய கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதிகார ரீதியான நெருக்கடிகள் என்பன இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையின் எஸ்.ஐ.எஸ் என்ற அரச புலனாய்வு சேவை, டி.எம்.ஐ என்ற இராணுவப்புலனாய்வுச் சேவை என்பன படை அதிகாரிகள் தாக்கப் படக்கூடும் என்ற எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்தும் லெப்.ஜெனரல் பரமி குலதுங்க மீதான தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகக் கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (கு)

புனர்வாழ்வுக் கழகத்துக்கான உதவியை நிறுத்த வேண்டும்! என்கிறது ஜே.வி.பி



கொழும்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கான நிதி உதவியை ஐ.நா. அமைப்புகள் நிறுத்த வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பி நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ இது குறித்து கூறியுள்ளதாவது -

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கான நிதி உதவியை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வுள்ளோம்.

அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியானது விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படுவது குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஆயுதங்களையும் விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வுக் கழகம் இறக்குமதி செய்துள்ளது. கண்ணி வெடி அகற்றலுக்கான பணிகளுக்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் புனர் வாழ்வுக் கழகம் நிதி உதவி பெற்று வருகிறது.

ஆனால், தொடர்ந்து அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

சுனாமி அனர்த்தத்துக்கான நிதியை பெருமளவில் புனர்வாழ்வுக் கழகம் பெற்றிருப்பதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் ஷெல் வீச்சு மூதூரில் மக்கள் இடப்பெயர்வு

திருகோணமலை

திருகோணமலை - மூதூரில் இராணுவத்தினர் நடத்திய பாரிய ஷெல் தாக்குதலையடுத்து அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மூதூர் - தர்கா நகரில் உள்ள அல் மனார் வித்தியாலயம் இந்தத் தாக்குதலில் சேதமடைந்ததுடன், அங்கு இடம் பெயர்ந்து தங்கியிருந்த பொதுமக்களும் வெளியேறி உள்ளனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னரும் இத்தகைய தாக்குதலை இராணுவத்தினர் நடத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் - இந்தத் தாக்குதலில் எவரும் கொல்லப்படவில்லை. கடந்த ஏப்ரல் மாதமும் முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதி மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஒரு மௌலவி கொல்லப்பட்டார். இத்தகைய தாக்குதல் மீண்டும் மேற்கொள் ளப்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

ராஜா யாழ்ப்பாணம்

கரண் சாதனா மற்றும் பலர் நடித்த

கொக்கி

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

மனோகரா யாழ்ப்பாணம்

மூன்றாவது வெற்றி வாரம்

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டு பயலே

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் 10.30,2.30,6.30.

மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு

நாடாளுமன்றத்தில் மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்தச் சட்டம் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னதாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளதாக மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் உயர் நீதிமன்றின் கருத்துகள் பரிசீலிக்கப்படும்.

இது தொடர்பாக ஜே.வி.பியினருடன் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றில் இந்தச் சட்டம் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதனிடையே மின்சாரசபை தொழிற்சங்கங்கள் இந்த மறுசீரமைப்பு சட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தமிழக துணிவிற்பனையாளரை மட்டக்களப்பில் காணவில்லை

கொழும்பு

மட்டக்களப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த துணிவிற்பனையாளரான சங்கரவேல் மெய்யப்பன் (வயது 35) என்பவரை காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 27ஆம் திகதி முதல் இவரைக் காணவில்லை என்று அவரது சகோதரர் சங்கரவேல் ராஜ்குமார் மட்டக்களப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த மே மாதம் துணி விற்பனையாளர் ஒருவர் வாழைச்சேனையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினரால் தாங்கள் சித்திரவதை செய்யப்படுவதாக தமிழகத்துக்குத் தப்பிச் சென்ற சிலர் ஊடகங்களில் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் துணி விற்பனையாளர் மெய்யப்பனை துணை ஆயுதக் குழுவினர் கடத்திச் சென்றிருக்கலாமெனக் கூறப்படுகிறது.

கருணாகுழு அலுவலகம் கொழும்பில் திறப்பு

கொழும்பு

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினராகிய கருணா குழுவினர் கொழும்பில் அலுவலகம் திறக்கவுள்ளனர்.

ஆனால், அந்த அலுவலகம் எப்போது, எங்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை.

துணை ஆயுதக் குழுவினராகிய கருணா குழுவினரை அரசியல் அமைப்பாக காட்டிக் கொள்வதற்காக அரசாங்கம் இத்தகைய முயற்சிக்கு ஆதரவளிக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. - திருக்குறள்.

நமது நோக்கு

ஊடகக் கொலை

தெகிவளையில் வைத்து சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு - சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

'சட்டன' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த றோகண குமாரவுக்குப் பின்னர் - படுகொலை செய்யப்பட்ட முதலாவது சிங்கள ஊடகவியலாளர் இவராவார்.

அரசாங்கத்தை, அரச படைகளின் நிர்வாகச் சீர்கேட்டை விமர்சித்ததற்காகச் சிங்கள ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதும்-

தமிழ்மக்களின் அவலத்தை, தாயகத்தின் உண்மை நிலவரங்களை வெளிப்படுத்தியதற்காக தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதும் இலங்கைத்தீவில் வழக்கமாகப்போய் விட்டது.

நிமலராஜன், நடேசன், டி.சிவராம், சுகிர்தராஜன் என்று தமிழ் ஊடகவியலாளர்கள் கொன்றுபோடப்பட்டதுடன் - மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் பத்திரிகை அலுவலக ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவையெல்லாம் உண்மைகளை மூடிமறைப்பதற்கான எத்தனிப்புக்களாகவே இருந்தன.

தமிழ் ஊடகவியலாளர்கள் கொன்றுபோடப்பட்டபோதெல்லாம் - சிங்கள ஊடகவியலாளர்களில் பலரும் அவர்களைப் புலிகளாகவே விமர்சித்தனர்.

அதன் விளைவாகவே - இன்று அதே சக்திகள் சிங்கள ஊடகத்துறையையும் பதம் பார்க்

நாடும் நடப்பும்

புலிகளின் நிபந்தனை குறித்து
நோர்வே தனித்து முடிவெடுக்க முடியாது
- பாலித கொகன்ன



அதிகார பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

அமைச்சர் கெகலிய ரம்புக்வெல

இரண்டு வாரங்களில் அரசாங்கத்தால் வெளியிடப்படும்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் முறையை சட்ட அடிப் படையில் முன்வைக்க - அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்

வதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம் பித்து அவற்றை முன்னெடுக்க நட வடிக்கை எடுப்போம்.

உலக நாடுகளில் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் முறை

கொழும்பைக் கதிகலங்கச் செய்யும் புலிகளின் புலனாய்வாளர்கள் !

'புலிகளின் உளவு சேவைத் தகவல்கள்' என்ற தலைப்பில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி வருகை விரிவுரையாளர் ராஜா என் றொட்றிக்கோ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

ஒரு நாட்டின் உளவு சேவை என்பது இரு செவிகள் மற்றும் இரு கண்களுக்குச் சமமா னவை. இது பாத்தா உளவு அமைப்பின் தலைவரான பலஸ்தீன முன்னாள் ஜனாதிபதி யசீர் அரபாத்துடைய கருத்தாகும்.

ஏதாவதொரு நாட்டின் பலமுள்ள உளவு வலையமைப்பு இல்லாமையே அந்த நாட்டின் பாதுகாப்பு பலவீனமடைவதற்குக் காரண மாகும். இலங்கையில் செயற்படும் விடுதலைப் புலிகளுக்கும் இதுபோன்ற மிகப் பலமான உளவு சேவை உள்ளது. இதன் செயற்பாடு

களை உலகத்துக்கு மறைத்துக் கொள்வதில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால், அது குறித்து உறுதியான தகவல்களை, தொகையை வெளிப்படுத்திக் கொள்வதில் கடந்த நாட்களில் படைத்தரப்பு வெற்றி கண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் வலையமைப்பு TOSIS என அறிமுகமாகிறது. (Tiger organaisation for intelligence) விடுதலைப் புலிகளின் உளவு சேவை என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும். இந்த் உளவு வலையமைப்பின் தலைவராக நடவடிக்கை களை மேற்கொள்வது பொட்டு அம்மான். அது அவரது அமைப்புக்காக பயன்படுத்தப்படும் பெயர். பொட்டு அம்மான் என்பது சங்கரலிங் கம் - சிவசங்கர் ஆவார்.

இந்த TOSIS அமைப்பு ஆரம்பிக்கப் பட்டது 1982 இல். அது படிப்படியாக வளர்ச் சியடைந்து தற்போது உலகில் 37 நாடுகளில் செயற்படும் அமைப்பாக வளர்ச்சி கண்டுள் ளது. உலகின் முக்கிய வரிசை பயங்கரவாத அமைப்பான அல்கொய்டாவின் உளவு சேவை உலகில் 98 நாடுகளில் பரவியுள்ளது. இதன்படி பார்க்கும்போது விடுதலைப்புலி களின் உளவு சேவையும் முக்கிய பரம்பலைக் காண்பித்துள்ளது. அவ்வாறு விடுதலைப் புலிகள் செயற்படும் அனைத்து நாடுகளிலும் TOSIS அங்கத்தவர்களும் உள்ளனர். ஏதாவதொரு நாட்டில் உள் நுழையும் இந்த அங்கத்தவர்கள், அந்த நாட்டின் பாதுகாப்பு பிரிவுகளுடன் ஒட்டிக் கொள்கின்றனர். குறிப்பாக பாதுகாப்பு பிரிவுகளுக்கு உளவுத் தகவல்களை வழங்கும் இரட்டை முகவர் களாக செயற்படுகின்றனர். இந்த அங்கத்த வர்கள் இந்திய றோ அமைப்பின் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக இந்திய ஊடகவி யலாளர் நாராயணசுவாமி ஒரு தடவை தெரிவித்திருந்தார்.

இவ்வாறு றோவிடமிருந்து 30 ஆயிரம் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொண்டுள் ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இவ்வாறு பாதுகாப்பு மற்றும் உளவுச் சேவையுடன் இணைந்து கொள்வதற்கு பல்வேறு நோக் கங்கள் உள்ளன.

பாதுகாப்பு, பொருளாதார பலம், தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன அவற்றில் அடங்கும். இவ்வாறு உளவு சேவை களுடன் இணைந்திருக்கும் போது சோதனை நடவடிக்கைக்கு இரையாக மாட்டார்கள். சிலவேளைகளில் இவர்கள் படைத்தரப்பின் அங்கத்தவர்கள் என்ற எண்ணத்தால் பல்வேறு சிறப்புரிமைகளைக் கூட அனுபவிப் பார்கள். தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளும் போது பல முறைகளுண்டு. ஒன்றாக நடவடிக்கை எடுப்பது மற்றும் கலந்துரையாடல் மூலம் இந்த அறிவு பரிமா றிக் கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக முறைமைகளும், பயிற்சியும் பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் TOSIS உளவு சேவை அங்கத்தவர்கள் இந்திய றோ அமைப் பின் முறைமைகள் சார் பயிற்சியைப் பெற் றுள்ளனர். விடுதலைப் புலிகளின் TOSIS உளவு சேவை வலையமைப்பு, அவர்கள் உளவுத் தகவல்களை வழங்குபவர்களை இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர்.

அவையாவன - ஒன்று வெளிக்கள செயற்பாட்டாளர்கள், இரண்டு நிலையான செயற்பாட்டாளர்கள்.

வெளிக்கள செயற்பாட்டாளர்கள் - நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடமாடி தேவை யான தகவல்களைத் திரட்டிக் கொள்வர்.

நிலையான செயற்பாட்டாளர்கள் - ஏதாவதொரு முக்கியமான இடத்தில் இருந்து கொண்டு தகவல்களைத் திரட்டி அவற்றைத் தேவையான இடங்களுக்கு அனுப்புவார் கள். இவ்வாறு தகவல்களை சேகரிப்பதற்காக உளவாளிகளுக்கு மிகப் பெரிய பணம் மற்றும் சலுகைகளும் வழங்கப்படும்.

இது சாதாரண தொழில் செய்பவர்களின் மூலம் கிடைக்கக்கூடிய சம்பளத்தைப் போன்று மூன்று, நான்கு மடங்கு அதிக மானது. நிலையான செயற்பாட்டாளர்கள் பெரும்பாலும் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களாவர். அவர்கள் தமது வழமையான தொழிலைச் செய்த படியே தகவல்களை சேகரிப்பதில் ஈடுபடுவர். தொழில் காரணமாக இவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பும் கிடைக்கும். சில நிலையான செயற்பாட்டாளர்கள் நகரிலுள்ள தொலைபேசி நிலையங்கள், சிகையலங்கரிப்பு நிலை யங்கள் மற்றும் ஹொட்டல்கள் ஆகியவற் றில் வேலைசெய்து கொண்டு இந்த உளவு தேடும் செயல்களில் ஈடுபடுவர்.

கடந்த காலத்தில் கொழும்பில் நிகழ்த்திய தாக்குதல்களின் போது விடுதலைப்புலி களுக்குத் தேவையான தகவல்களை அரசின் உயர்பதவிகளை வகித்த நிலையான செயற்பாட்டாளர்களே வழங்கியுள்ளனர்.

வெளிக்கள செயற்பாட்டாளர்கள் நகரில் நடமாடி தகவல்களைத் தேடுவார்கள். இதுவரை இவ்வாறான குழுவினர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகரங்களில் நடமாடி தமது இலக்கைத் தெரிந்து கொண் டுள்ளார்கள். விசேடமாக பிரமுகர்களின் கொலைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குவது இவர்களே. இந்தச் செயற் பாடுகளின் போது அவர்கள் தகவல்களைத் திரட்டுவது கீழே காண்பிக்கும் திட்டத் துக்கமையவே.

இலக்குக்குத் தேவையான நபர் யாரென்பதை முதலில் விளங்கிக் கொள் வார்கள். அவர்களது புகைப்படங்கள் தேவையெனில் வழங்கப்படும். அவர் எந்த அமைப்புடன் தொடர்புபட்டு நடவடிக்கையை மேற்கொள்கின்றார்? அங்கு அவரது நிலைமை எப்படி? கொல்லப்பட வேண்டியவரது உடல் அடையாளம், குண சுபாவம் என்பன முதலில் தெரிவிக்கப்படும். கொலை செய்யப்படவேண்டிய நபர் விவாகமானவரா? பிள்ளைகள் உள்ளனவா? எத்தனை? உறவினர்கள் யார்? என்ற தகவல்கள் இரண்டாம் கட்டத்தில் சேகரிக் கப்படும். கொலை செய்யப்படவேண்டிய நபர் வசிப்பது எங்கே? எந்த வீதியால் தினமும் அவர் எந்த இடத்துக்கு செல்கிறார்? எந்த வாகனம், அதன் ரகம், வாகனத்திலிருந்து எந்த இடத்தில் இறங்குகிறார்? போன்ற தகவல்கள் தினமும் சேகரிக்கப்படும்.

கொல்லப்படவேண்டிய நபர் பயணம் செய்யும் போது ஆயுதங்கள் எடுத்துச் செல்கின்றாரா? அவற்றின் ரகங்கள் என்ன? என்பது குறித்தும் ஆராயப்படும். இந்த தகவல்களைத் திரட்டித் தன்னுடைய உயர் அதிகாரிக்கு அனுப்புவது செயற்பாட்டாளரின் பொறுப்பாகும்.

கொலை செய்யப்படவேண்டிய நபரின் வீட்டுக்கு அண்மையாக உள்ள சந்தி கொலைக்காக அதிகம் பயன்படுத்தப்படும். கொலைக்கான இடம் தெரிவு செய்யப்பட் டதன் பின்னர் அந்த இடத்திலிருந்து தகவல்கள் திரட்டுவது ஆரம்பிக்கப்படும். அதன்படி குறிப்பிட்ட தினத்தன்று தாக்குதல் நடத்தப்படும்.

தாக்குதல்களுக்காக பயன்படுத்தப்படும் இடம், படைத்தரப்பின் கண்காணிப்பில்லாத இடமாக இருக்க வேண்டும்.ஆகவே இதற்காக பாழடைந்த வீடு அல்லது கட்டடம் தெரிவு செய்யப்படுவது மிக இலகுவானது. ராஜகிரிய வில் நிகழ்ந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட் டது கைவிடப்பட்ட வீடொன்றே. அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்கு பயன்படுத்தப்பட்டது எவரும் வசிக்காத மேல்மாடி வீடு. கொழும்பு கல்லொக்கம விலுள்ள கைவிடப்பட்ட மிகப் பெரிய கட்ட மொன்று உள்ளது. இது சலுசல நிறுவனத் துக்கு சொந்தமானது. இந்தக் கட்டடமும் இது போன்ற நடவடிக்கைக்குப் பயன்படுத்தக் கூடியது. ஆனால், பரிதாபத்துக்குரிய விடயம் - படைத்தரப்பு அந்தக் கட்டடத்தின் மீது கண்காணிப்பு செலுத்தாமையே. எதிர் காலத்தில் ஏதோ ஒருவகையில் அந்த இடத்திலிருந்து தாக்குதல் நடத்தப்படலாம். எனவே, அந்தக் கட்டடத்தைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுவது அத்தியாவசியமானது.

2000 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பில் நடவடிக்கைகளை பிரேம் என்பவரே மேற் கொள்கின்றார்.

அவருக்கு பிரான்சிலிருந்து உளவு சேவை நிதியத்துக்கு கடிதம் மூலம் ஆலோசனை வழங்குகின்ற னர். இந்த ஆலோசனை களை குறிப் பிட்டதோர் சமிக்ஞை மொழியிலேயே வழங்குகின்ற னர். கொழும்பு நகரை இலக்கு வைத்து மேற் கொள்ளப்படும் தாக்குதலுக்கு இவ்வாறு தகவல்கள் திரட்டப்படும். இவ்வாறு சமிக்ஞை மூலம் வழங்கிய தகவல் மற்றும் கடந்தகால நிகழ்வுகளை ஆராய்ந்து பார்க்கும்போது அவர்களது செய்தியை விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறு செய்திகளுடன் கடிதங்கள் வருவது அரசின் உயர்வரிசை அதிகாரி ஒருவரது பெயரிலேயே. இந்த அதிகாரி விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகம் சிலகாலமாக நிலவியது. அண்ணா எனும் இந்த அதிகாரி தபாலுக்கும் பிரேமுக்குமிடையே தொடர்பு நடவடிக்கை களை மேற்கொள்கின்றார்.

இதுவரை விடுதலைப் புலிகளின் இலக்காகவுள்ளது கடற்படையே. எனவே கொழும்பில் செயற்படும் இரகசிய உளவு சேவை வலையமைப்பு அதிகமாக ஈடுபட் டுள்ளது கடற்படை மற்றும் அதனோடு தொடர்புடைய தகவல்களை திரட்டிக் கொள்வதற்கே.

கடற்படை மீது தாக்குதல் தொடுப்பது அவர்கள் புலிகளின் கடற்பயிற்சிகளுக்கு தடை செய்வதனால் என புலிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். அதேபோன்று இலங்கை கடற்பிரதேசத்தில் புலிகளின் படகைச் சோதனை யிடுவதற்கு கடற்படைக்கு அதிகாரம் இல்லை யெனவும் புலிகள் கூறுகின்றனர். ஆனால், கடலில் செல்லும் படகுகள் பற்றி விதிக்கப் பட்டுள்ள ஐ.நா.வின் 111 நியதிச் சட்டம் 110 - 2 சரத்து கீழ் இலங்கை யுத்தக் கப்பல்களுக்கு எந்த ஒரு சந்தேகத்துக்குரிய கப்பலையும் சோதனையிட முடியும்.

விடுதலைப் புலிகளின் கடல் இறைமை யைப் பாதுகாப்பதற்கு செயற்பட்ட ஒருவராக காந்தரூபனைப் போன்று பெண் கடற்புலித் தலைவியாக அங்கையற்கண்ணியையும் வர்ணிக்கின்றார்கள். இதன்படி கடற்படை அவதானத்துடன் இருக்க வேண்டுமென்பது மிகவும் தெளிவாகத் தெரியும் விடயமாகும்..

இதுவரை கொழும்புக்கு வந்துள்ள இந்தத் தகவல் வலையமைப்பின் அங்கத்தவர்கள் கடற்படை மற்றும் துறைமுகம், அதனை அண்மித்த இடங்கள் குறித்து தகவல்களை ஒன்று திரட்டி அனுப்பியிருப்பர். இதற்காக 36 வயதுடைய பாடசாலை ஆசிரியையான கிருசாந்தினி மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இந்த அமைப்பை அமைக்கும் போது முன்மாதிரியாக ஹிட்ல ரின் புலனாய்வு அமைப்பைக் கொண்டுள் ளனர். அதன்படி இதில் வேலை செய்வது யாரென்பது விடுதலைப் புலிகளின் உறுப்பினர் களுக்கு கூடத் தெரியாது. கொழும்புக்கு வரும் செயற்பாட்டாளர்களுக்கு நன்றாக சிங்களம் பேசக் கூடிய இயலுமை வழங்கப்பட்டுள்ளது. அதன் படி சொற்கள் உச்சரிப்புகளில் நிகழும் சந்தே கத்தை நீக்கிக் கொண்டு சூரத்தனம் வாய்ந்தவர்களாக நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற னர். இவர்கள் சிங்கள யுவதிகளுடன் காதல் கொள்வார்கள். பின்னர் அவர்கள் தமக்குத் தேவையான தகவல் களைப் பெற்றுக் கொள்வார்கள்.

1988 இல் சுரேஷ் எனும் உளவுப் பிரிவுச் செயற்பாட்டாளர் தமது நடவடிக்கையை முகத்துவாரம் பிரதேசத்தில் ஆரம்பித்தார். அவருக்கு அந்தப் பகுதியில் காதலி ஒருத்தி கிடைத்தாள். சுரேஷ் - காதலியுடன் கொழும்பு முழுவதும் மோட்டார் சைக்கிளில் சென்ற துடன், அதற்கிடையில் தேவையான தகவல் களை திரட்டிக் கொண்டதும் தெரிந்தது.

தற்போது முகத்துவாரம் உட்பட்ட பல பிரதேசங்களில் இது போன்ற செயற்பாட்டா ளர்கள் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் வேறு முக்கிய நிலையங்களிலிருந்து 100, 200 மீற்றர் தூரத்திலிருந்து மோட்டார் சைக் கிளில் வந்து காதல் உரையாடல்களை நடத் தும் சோடிகள் குறித்து சந்தேகம் தோன்று வதை சொல்ல வேண்டி இருக்கிறது.

ஏனெனில் இவர்கள் நாளை எந்த இடத்திலாவது வெடிக்கும் குண்டுகளாக மாறலாம்.

இல்லையெனில், அவர்கள் கொலைக்கான தகவல்களை சேகரிப்பது மேலுமொரு தாக்குதலுக்காக இருக்கலாம்.

எனவே விழிப்புடன் இருப்பது அத்தியாவசியமானதாகும்.

தமிழில் - நாடோடி

உலகப் போரியல் வரலாற்றில் கரும்புலிகள் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியவர்கள்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்—

தனி மனிதர்களாகவே சென்று தரணியே வியக்கும் அளவுக்கு சாதனைகளை நிலைநாட்டி உலகப் போரியல் வரலாற்றில் எமது விடுதலைப்போருக்கு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் கரும்புலிகள் என - கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது விடுதலைப் போராட்ட வேள்விக்கு எமது இனம் பல வழிகளிலே தன் தியாகத்தை ஆகுதியாக்கி சொரிந்து இன்று சர்வதேசத்தின் கவனத்தை எம் பக்கம் திருப்பியுள்ளது.

அது மட்டுமன்றி களத்திலே போராடி ஆயிரம் ஆயிரம் வெற்றிகளை அள்ளிக் குவித்து இராணுவ பலத்திலும் நாம் இருப்பதை அரசுக்கு சமமானவர்கள் அல்லது அதனிலும் மேலானவர்கள் என்பதை வலியுறுத்தி நிற்கும் வேளையில் - இந்தக் களமுனை வெற்றிகள் அனைத்துக்கும் பின்னால் நின்று தாங்கு சக்திகளாக விளங்கியவர்கள் எமது கரும்புலிகள்.

தனி மனிதர்களாகவே சென்று தரணியே வியக்குமளவுக்கு சாதனைகளை நிலை நாட்டி உலகப் போரியல் வரலாற்றிலே எமது விடுதலைப் போருக்கு புதிய அத்தியாயங்களை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் கரும்புலிகள்.

களமுனை செல்லும் போதெல்லாம் தம் சாவினை விட - இலக்கையும், கொண்ட கொள்கையையுமே நேசித்து அதற்காகவே வெடிசுமந்து பஞ்சாகச் சீதறி காற்றோடு கலந்தவர்கள். கடலிலே கடற்கரும்புலிகளாகவும், தரையிலே கரும்புலிகளாகவும் இதைவிட முகவரியற்ற மனிதர்களாக எதிரியின் தலைவாசல் வரையும் சென்று, வெடித்து எமது இன விடுதலையை நேசித்த தீரர்கள்.

1987ம் ஆண்டு அதே நாள் நெல்லியடியிலே முகாமிட்டு இருந்த படையினரை தனது வாகனத்திலே வெடிசுமந்து சென்று வெடிமருந்து மூலமாக கொன்றழித்து எமது போரியல் வரலாற்றிலே புதியதொரு பாதையை கரும்புலி கப்டன் மில்லர் திறந்து வைத்தார். அவரது பாதையில் இன்று வரை மொத்தமாக 280க்கும் மேற்பட்ட கடற்கரும்புலிகளும், தரைக்கரும் புலிகளும் காவியமாக எம் நெஞ்சங்களில் உள்ளனர்.

எனவே, எமது விடுதலையையே தமது இலக்காகக் கொண்டு மடிந்த எமது கரும்புலி மறவர்களை இன்று மட்டுமல்ல என்றுமே எமது நெஞ்சில் வைத்து பூசிப்போமாக.

யாழ். குடாநாட்டிலே தொடரும் இராணுவ வன்முறைகள் எம் புனிதர்களின் புதைகுழிகளையும், நினைவுச் சின்னங்களையும் சின்னாபின்னப்படுத்தினாலும் எமது நெஞ்சிலே ஆழப்பதிந்த மாவீரர் நினைவுகளை அழிக்கவே முடியாது என்பதை எதிரிக்கு பூரியவைப்போம். மாவீரர் கரும்புலிகள் நினைவுகளை நெஞ்சங்களில் நிறுத்துவோம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

கனிப் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் தகவல் தொழில்நுட்ப பூங்கா கணணிப்பயிற்சி நிலையத்தில் அரசாங்க அதிபர்களுக்கான கணணிப் பயிற்சி மீண்டும் இன்று ஆரம்பாமாகவுள்ளதாக யாழ். பிராந்திய உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தினால் அரசாங்க அலுவலகர்களுக்கான கணணிப்பயிற்சி குறித்த நிறுவனத்தில் நடைபெற்று வந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இ.போ.சபை பஸ் சேவைகள் பணிப்புறக்கணிப்பால் ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணம்—

போக்குவரத் துச் சபையின் பஸ் சாரதி ஒருவர் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து இ.போ.ச. சாரதிகளின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக நேற்று குடாநாட்டில் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் ஸ்தம்பி தம் அடைந்தன.

நேற்று முன்தினம் மாலை கே.கே.எஸ். வீதியில் 769 பஸ் சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் கொக்குவில் சந்தியில் வைத்து பஸ் சாரதியான நீர்வேலி வடக்கைச் சேர்ந்த மயில்வாகனம் கண்ணதாசன் என்பவர் படையினரால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே நேற்று பஸ் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சாரதிகளின் பணிப் புறக்கணிப்பு காரணமாக குடாநாட்டில் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இடம் பெறவில்லை.

தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. போக்குவரத்துச்சபை பஸ்கள் சேவையில் ஈடுபடாததன் காரணமாக தனியார் பஸ்களில் மக்கள் நெரிசல் அதிகமாகக் காணப்பட்டது.

முகமாலை மற்றும் தூர இடங்களுக்குச் செல்லவென யாழ். நகருக்கு வருகைதந்த மக்கள் போக்குவரத்துச் சேவை பஸ்கள் சேவையில் ஈடுபடாத தன் காரணமாக தனியார் பஸ்களிலேயே தமது பயணத்தைத் தொடர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும், மாலையில் பஸ் சேவை வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை- சாரதிகள் படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதெனவும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் தமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் நேற்று யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் இடம்பெற்ற படைத்தளபதியுடனான சந்திப்பில் படைத்தளபதியைக் கேட்டுக்கொண்டதாக போக்குவரத்துச் சபையின் (வடக்கு) செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்தார்.

அத்துடன், படையினரின் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பஸ் சாரதியான மயில்வாகனம் கண்ணதாசனை படை அதிகாரி சென்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதி மாகாண பணிப்பாளர் சுகாதார சேவைகள்
யாழ்ப்பாணம்

கூறுவிலை அறிவித்தல்
HSDP Project

யாழ்ப்பாணம் பிரதி மாகாணப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம் அவர்களால் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலை, சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலைகளுக்கு உள்ளக தொலைபேசி இணைப்புக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் (உபகரணங்களுக்கான பெறுமதியைத் தவிர்த்து) தமது கூறுவிலையை எதிர்வரும் 14.07.2006ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். கூறுவிலைப் படிவங்களை மீளளிக்கப்பட முடியாத கட்டணமாக ரூபா 250 செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

நன்றி

வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன்,
பிரதி மாகாணப் பணிப்பாளர்
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
[C/5439] 03.07.2006

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் படைத்தளபதியிடம் சாரதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்—

தமக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால் மாத்திரமே சேவையாற்ற முடியுமென யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பஸ்சாரதியான நீர்வேலியைச் சேர்ந்த மயில் வாகனம் கண்ணதாசன் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று பஸ்சாரதிகள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, நேற்று மதியம் யாழ். ஓ.எல்.ஆர் தேவாலயத்தில் நடைபெற்ற யாழ். பிரதம சிவில் இணைப் பதிகாரி கேணல் பெரேராவுடனான சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அங்கு பிரதம சிவில் இணைப்பு அதிகாரியிடம் மேலும் தெரிவிக்கப் பட்ட விடயங்களாவன -

அண்மையில் சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள் படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால், பஸ் சாரதிகள் உரிய முறையில் மக்களுக்கான பஸ் சேவைகளில் ஈடுபடமுடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளனர். எனவே, இனிமேல் இவ்வாறு படையினரால் சாரதிகள் தாக்கப்படாமல் இருக்கும் வகையிலும், எமது சேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும்.

சாரதிகளின் இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த கேணல் பெரேரா-

சாரதி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக மேல திகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும். சாரதிகள் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மீண்டும் சேவைக்கு திரும்ப வேண்டும் என தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் போக்குவரத்து சபையின் (வடக்கு) செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன், மேலதிக அரச அதிபர் சிவசுவாமி மற்றும் குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் அனைத்து போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள், நடத்துனர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 35 வருட கனவு நனவாகியது!



ஜமேக்கா—

இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையில் ஜமேக்காவில் நடைபெற்ற நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 49 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

முன்னதாக நடைபெற்ற முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளும் சம நிலையில் முடிவடைந்ததால், தொடரை நிர்ணயிக்கும் இறுதிப் போட்டியில் இரு அணிகளும் களம் இறங்கின.

இதன்படி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆனாலும் இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது.

அதிரடி ஆட்டக்காரர் சேவாக் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டம் இழந்தார். மற்றைய ஆரமபத் துடுப்பாட்ட வீரரான ஜாபரும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழக்க இந்திய அணி தடுமாறியது. பின்னர் களமிறங்கிய ராவிட் நிதானமாக ஆடினாலும் மறுபுறம் விக்கெட்டுக்கள் சரிந்த வண்ணம் ,இருந்தன. லக்ஷ்மன் 18, யுவராஜ் 19,கைவ் 13 , டோனி 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

கும்ளே அணிக்கு கைகொடுக்க 200 ஓட்டங்களுக்கு இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அதிக பட்ச மாக ராவிட் 81 ஓட்டங்களையும் கும்ளே 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ரெய்லர் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அடுத்து முதல் இனிங்சை ஆடத் தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி ஹர்பஜனின் சுழலில் சிக்கி 103 ஓட்டங்களுக்குள் ஆட்டம் இழந்தது.

இதில் அதிகபட்சமாக கங்கா 40 ஓட்டங்களையும் அணித்தலைவர் லாரா 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து 97 ஓட்டங்கள் முன்னிலை வகித்த இந்திய அணி இரண்டாவது இனிங்சை ஆடத்தொடங்கியது.

ஆனாலும் அணித்தலைவர் ராவிட்டைத் தவிர எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் பிரகாசிக்காததால் 171 ஓட்டங்களுக்குள் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ராவிட் அதிகபட்சமாக 68 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் சார்பாக கொலிமோர் 5 விக்கெட்டுக்களையும், ரெய்லர் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 269 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியதீவுகள் அணி அனில் கும்ளேயின் சுழலில் சிக்கி 219 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

அந்த அணி சார்பாக சர்வான் 51 ஓட்டங்களையும், ரம்டீன் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக கும்ளே 6 விக் கெட்டுக்களையும், சிறீசாந்த் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றி மூலம் இந்திய அணி கரியபின் மண்ணில் 35 வருடங்களுக்குப் பின்னர் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய வரலாற்றுச் சாதனையையும் நிகழ்த்தியது.

ஆடுகளம் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக தயாரிக்கப்பட்டு இருந்ததால் 3 நாட்களுக்குள்ளேயே இந்த போட்டி முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

தெஹிவளை மர்மப் பொதியில் இரு தொலைத்தொடர்பு சாதனங்கள்

கொழும்பு

கொழும்பு -தெஹிவளையில் பல் பொருள் அங்காடி ஒன்றில் சந்தேகத்துக்கிடமான பொதியொன்றிலிருந்து இரு தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொலிஸார் மீட்டனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் சந்தேகத்துக்குரிய பொதியொன்று இருப்பதாக பெண் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரின் உதவியுடன் நடத்திய தேடுதலின் போது- குறிப்பிட்ட பொதியிலிருந்து இரு தொலைத்தொடர்பு சாதனங்களை மீட்டனர்.

இவை தொலைவிலிருந்து குண்டுகளை வெடிக்க வைக்கும் தன்னியக்கக் கருவிகளாக பயன்படுத்தக்கூடியவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேகத்துக்குரிய பொதி குறித்த தகவலை அடுத்து காலி வீதி நேற்றுக்காலை சிறிது நேரம் மூடப்பட்டது. இதனால் வாகன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டியில் கைக்குண்டு மீட்பு!

கொழும்பு

கொழும்பு - பம்பலப்பிட்டியில் கைக்குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டு செயலிழக்கச்செய்தனர்.

நேற்றுமாலை 5.30 மணியளவில் பம்பலப்பிட்டி,கொத்தலாவல வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டு செயலிழக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திக்கத்தில்...

ஹெலிகொப்டர் ஒன்று ஏற்றிச் சென்ற தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

அதிரடிப்படை...

இரு விசேடஅதிரடிப்படையினர் படுகாயமடைந்து - மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

இதையடுத்து, விசேடஅதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோதும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின்...

தமது நிலை மீது துப்பாக்கிச் சூடு நடத்தியபோதே அவரைத் தாம் சுட்டுக்கொன்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் சடலத்தை களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக ஒப்படைத்துள்ளனர்.

குருநாகல் நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு

குருநாகல் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு பகுதியையும் தென்னிலங்கையையும் இணைக்கும் மத்திய பகுதியாக குருநாகல் காணப்படுவதால் அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் அந்தப் பகுதியில் வைத்து வாகனங்கள் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறன.

இதேவேளை - அந்த மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் விபரங்கள் திரட்டப்பட்டதுடன் - அரசாங்க தினைக்களங்கள், பாடசாலைகள், வங்கிகள் என்பவற்றில் பணிபுரிவோரின் விபரங்களும் கிராம அலுவலரால் திரட்டப்பட்டு வருகின்றன.

கிரனேட்...

தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரு பொலிஸ் அதிகாரிகளும், சிவிலியன் ஒருவரும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் மூவரும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

பங்களாதேஷ் கடற்படை தளபதி கொழும்பு விஜயம்



கொழும்பு

பங்களாதேஷ் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ஹசன் அலிகான் 5 நாள் விஜயமாக நேற்றுக் காலை கொழும்பு வந்தடைந்தார்.

இவர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்து - கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்ன கொடவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது - இரு தரப்பு கடற்படை ஒத்துழைப்பு நடவடிக்கை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

பங்களாதேஷ் கடற்படைத் தளபதி நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கடற்படைத் தளங்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பார்வையிட உள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகள் மீது...

மாட்டின் மக்கன்னஸ் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்துப் பேசினார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானசெயலகத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் ஆகியோர் இந்தச்சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச்சந்திப்பின் பின்னர் ஊடக வியலாளர்களிடம் ஐ.ஆர்.ஏயின் மூத்த தலைவர் மக்கன்னஸ் கூறியதாவது-

நாம் அயர்லாந்திலிருந்து வந்திருக்கிறோம். உலகின் மிகவும் வெற்றிகரமான அமைதிப்பேச்சுவார்த்தையை நாம் நடத்தியிருக்கிறோம். எமது சின் பெய்ன் இயக்கத்தின் அனுபவங்களை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மட்டுமல்லாது, அரச தரப்பினருடனும் பகிர்ந்து கொள்ளவுள்ளோம். எம்மீது பிரித்தானியா பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடைவிதித்திருந்த நிலையில்தான் நாம் பேச்சுக்களை நடத்தினோம்.

அமைதிப்பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரையும் சமதரப்பாக உரிய மரியாதையுடன் நடத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருப்பதானது பாரிய தவறானது எனத் தெரிவித்தார்.

அயர்லாந்து விடுதலை இயக்கமான ஐ.ஆர்.ஏயில் 1970 ஆம் ஆண்டில் தனது 20 ஆம் வயதில் மக்கன்னஸ் தன்னை இணைத்துக்கொண்டார். ஐ.ஆர்.ஏயின் இரண்டாம் நிலைத் தலைவராக 21 ஆம் வயதில் பொறுப்பேற்றார்.

அயர்லாந்து விடுதலை அமைப்பான சின்பெய்ன் இயக்கத்தில் மூத்த தலைவராக உருவான மக்கன்னஸ்- 1972 ஆம் ஆண்டு பிரித்தானியாவுடன் நடந்த பேச்சுக்களில் பங்கேற்றார். அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் பிரித்தானியாவின் பல்வேறு பேச்சுக்களில் அவர் கலந்துகொண்டார்.

புதிய வடஅயர்லாந்து சபையின் கல்வி அமைச்சராக 1999 ஆம் ஆண்டு நவம்பரில் தெரிவு செய்யப்பட்டார்.

தாண்டிக்குளத்தில்...

போனவராக இருக்கக்கூடும் என பொதுமக்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் மாலை 5.30 மணிக்குப் பின்னர் எவரையும் படையினர் அனுமதிப்பதில்லை என்றும் - இது ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவரின் சடலமே என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் சடலத்தை பிரேத பரிசோதனை செய்யவும் மீட்கப்பட்ட துப்பாக்கியை இரசாயனப் பரிசோதனைக்குட்படுத்துமாறும் உத்தரவிட்டார். அத்துடன் சடலத்தை அடையாளம் காண சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் உதவியைப் பெறுமாறு அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை- இந்த மோதலில் இரண்டு படையினர் காயமுற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கு...

இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இருதரப்பினருக்கு மிடையில் அரசியல் இணக்கப்பாடு காணப்பட வேண்டும்.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போது - வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியா - இலங்கைக்கு இடையில் ஏற்பட்டுள்ள தொடர்பு, மற்றும் வலயத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயம் குறித்து இந்திய வெளியுறவுத்துறை பேச்சாளர் நவ்தேஜ் சர்னா நேற்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் -

இந்த விஜயம் இலங்கை வெளியுறவுச் செயலரின் அழைப்பின்பேரில் மேற்கொள்ளப்பட்டதாகவும், இது வழமையாக இரு நாடுகளுக்குமிடையே நடக்கும் உயர்மட்ட கருத்துப் பரிமாறல்களில் ஒரு பகுதியாகும் என்று கூறினார்.

இந்தக் கருத்துப் பரிமாறல்களின் போது, பரந்துபட்ட அளவில் இரு தரப்பு கூட்டுறவு மற்றும் இலங்கை அமைதி வழிமுறையின் தற்போதைய நிலைகுறித்தும் விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளியுறவுச் செயலர் சியாம் சரண் நேற்றுக்காலை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது -

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி உடன்படிக்கை ஒன்றை உருவாக்கத் தேவையான அரசியல் கருத்தொற்றுமையை எட்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பற்றி விவாதிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திருமலையில் குண்டு...

பயணிகளைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தபோது - அந்தப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஓட்டோவொன்றை படையினரும், பொலிஸாரும் சந்தேகம்கொண்டு அதனருகே சோதனையிடச் சென்றனர்.

அப்போது திடீரென ஓட்டோவினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு-றிமோட் கொன்றோல் மூலம் தொலைவிலிருந்து வெடிக்கவைக்கப்பட்டது.

நேற்றுப்பகல் 11.55 மணியளவில் இடம்பெற்ற இந்தப்பாரிய குண்டு வெடிப்பில் ஓட்டோ சுக்குநூறாகச் சிதறியதுடன்-அதனருகே நின்ற பொலிஸார், ஊர்காவற்படையினர், இராணுவச்சிப்பாய்கள், பெண் ஒருவர் என ஆறு பேர் அந்த இடத்திலேயே பலியாகினர். மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர்.

ஆபத்தான நிலையில் இருந்த மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் மரணமடைந்ததையடுத்து இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தோர் தொகை 7 ஆக அதிகரித்துள்ளது. இரண்டு பொலிஸ் சார்ஜன்டுகள், இரு பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள், ஒரு இராணுவச் சிப்பாய் மேலும் சோதனையிடப்பட்டுக்கொண்டிருந்த எஸ்தர்(வயது 28) என்ற பெண் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

3 இராணுவத்தினர், 2 பொலிஸார், ஒரு விமானப்படைச்சிப்பாய், ஊர்காவற்துறைப்படையைச் சேர்ந்த ஒருவர் என 7 படையினரும், 5 பொதுமக்களுமாக 12 பேர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்தில் காயமுற்றவர்கள் திருகோணமலை வைத்திய சாலை, கடற்படைத்தள வைத்திய சாலை ஆகியவற்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தத் தாக்குதலையெடுத்து-அந்தப்பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்டதுடன் - பாலையூற்று பகுதியிலுள்ள பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதனால் பல குடும்பங்கள் அச்சத்தால் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். (10)

ஊரெழுவில் கிளைமோர்; படைவாகனம் தப்பியது!

யாழ்ப்பாணம்

ஊரெழுவில் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரத்தின் மீது நேற்றுமாலை கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஊரெழு - கரந்தன் வீதியில் படையினருக்கு உணவு கொண்டு சென்ற உழவு இயந்திரத்தின் மீதே நேற்று பிற்பகல் 5.50 மணியளவில் இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் எனினும் தமது தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

உடனடியாக சம்பவ இடத்துக்கு மேலதிக படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

பொலிஸார் மீது தாக்குதல்!

அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் உள்ள உகண பிரதேசத்தில் கோணகல பொலிஸ் காவலரண் மீது நேற்று காலை இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 5 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். இதன் பின்னர் தாக்குதலை நடத்தியோர் தப்பிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் சேதம் எதுவும் தமக்கு ஏற்படவில்லை என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்

தென்மராட்சி - கல்வயல் பகுதியில் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை - திருகோணமலை-மகாமாயபுரவில் ஊர்காவற்படை காவலரண் மீது நேற்றிரவு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசேட ஊடகத்தகவல் மையம் தெரிவித்தது.

நேற்றிரவு 8.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் போது எந்தவித சேதமும் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

படையினர் மீது துப்பாக்கிச் சூடு!

வடமராட்சி

வதிரி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிப் பகுதியில் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துபபாக்கிப் பிரயோகத்தையடுத்து படையினரும் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

எனினும் இந்தச் சம்பவத்தில் படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல் எதுவும் வெளியாகவில்லை.

பணிநிலை வெற்றிடம்

1. உதவி ஆசிரியர் -

(செய்திப் பத்திரிகை ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

2. அலுவலக செய்தியாளர்கள் - (பயிலுனர்)

பத்திரிகைத்துறையில் ஆர்வமுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

3. ஒப்புநோக்குநர் -

க.பொ.த சாதாரணதரத்தில் தமிழில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

பணிநிலை வெற்றிடம்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-நிர்வாக இயக்குநர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.